**மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்**

**පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත්**

**PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE**

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## சுயகற்றல் செயற்பாடு

## தரம் - 11

## பகுதி 1

**தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. "அற்றைத்திங்கள் அவ்வெண் நிலவில் ...." இங்கு திங்கள் என்பதன் கருத்து
   1.சந்திரன் 2.மாதம் 3.நாள் 4.கிழமை
2. "பரிந்தவர் நினைவு நாள் பகருவார் இல்லை" இங்கு பரிந்தவர் என்பதன் கருத்து.
   1.இறந்தவர் 2.கூறுவார் 3.அன்புகொள்பவர் 4.நினைப்பவர்
3. "எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்" இங்கு ஈதல் என்பதன் எதிர்க்கருத்து.
   1.கொடுத்தல் 2.வாங்குதல் 3.வேட்டல் 4.ஏற்றல்
4. "ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர்..." இங்கு தமர் என்பதன் எதிர்க்கருத்து.
   1.உறவினர் 2.நண்பர் 3.பிறர் 4.தீயவர்
5. "வேதம் மூன்றும் பலாவுள்ள நாடு...'இங்கு வேதம் மூன்றும் என்பதனுள் அடங்காதது.
   1.வேர் 2.கனி 3.பயன் 4.மரம்

**பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6. "அவவின் கருகருவென்ற தலைமுடிக்கு இதுதான் பஸ்பம்" இங்கு "பஸ்பம்" என்ற சொல் தரும் பொருள்.
   1.வலிமை 2.ஒளி 3.இரகசியம் 4.அழகு
7. கொப்பு, கூட்டம், சுற்றம் என்னும் பொருட்களைத் தரும் சொல்
   1.கிளை 2.கலம் 3.மரம் 4.அணி
8. பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு
   1.பகைவன்-எதிரி 2.சோலை-தோப்பு 3.ஏதம்-குற்றம் 4.இரண்டகம்-நேர்மை
9. ஆண் மாடு எருது: ஆண் மான்
   1.குருளை 2.ஏறு 3.கலை 4.பிணை
10. சினிமாத்துறையில் புறஜெக்சன் (Projection) என்பது
    1.படத்தொகுப்பு 2.ஒலிப்பதிவு நாடா 3.ஒலியெறிதல் 4.ஒளி விளக்குகள்
11. காது கொடுத்தல் என்ற மரபுத்தொடரின் பொருள்
    1.அவதானித்துக் கேட்டல் 2.கோள்சொல்லுதல் 3.இரகசியம் கூறுதல் 4.ஏமாற்றுதல்
12. "பவித்திரமான எங்கள் குடும்ப சந்தோசத்திலும், அன்னியோன்னியத்திலும் இப்படியாக ஒரு கீறல் விழுந்துவிட்டதே..." அன்னியோன்னியம் என்ற சொல் உணர்த்துவது
    1.அன்னியத்தன்மை 2.நெருக்கம் 3.முரண்பாடு 4.இடையீடு
13. மேலே கிளம்பின பிறிற்றோ கட்சியினர் மெல்லமெல்ல கீழே இறங்கித் தரைமட்டத்துக்கு வந்துவிட்டார்கள் இங்கு மெல்லமெல்ல என்பது
    1.இரட்டைக்கிளவி 2.அடுக்குத்தொடர் 3.இணைமொழி 4.அடுக்கிடுக்குத்தொடர்
14. பெண்ணும் சுற்றமும் உடன்படாமல் வலிந்து கொள்ளும் மணம்
    1.சுயம்வரம் 2.இராக்கதம் 3.மாராயம் 4.திருமணம்

15. ஆயுள் முழுவதும் பிரமச்சரியம் காத்து வாழ்வோன்
   1.நைட்டிகன் 2.தேவராளன் 3.நொதுமலர் 4.பௌராணிகன்
16. “உழைத்து பொருள் தேடாது செலவுசெய்தால் எந்தப்பெருஞ் செல்வமும் தீர்ந்து போகும்” என்ற கருத்தைத் தரும் பழமொழி.
   1. எறும்பூரக் கற்குழியும் 2. உண்ணாச்சொத்து மண்ணாய்போகும்
   2. குந்தித்தின்றால் குன்றும் மாளும் 4. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்
17. குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர் என்ற பழமொழி மூலம் வலியுறுத்துவது
   1.வீண்பெருமை 2.நன்றியுணர்வு 3.நிதானம் 4.நேர்மை
18. “ஆத்திரத்தோடு நண்பர் அவுக்கென எழுந்து இரண்டிலொன்று பார்ப்பது என்று பாய்ந்து வந்தார்” இங்கு அவுக்கென என்ற ஒலிக்குறிப்புச் சொல் உணர்த்தும் பொருள்.
   1.கோபம் 2..பயம் 3.விரைவு 4.ஆச்சரியம்
19. யாவும் இழந்து வெறுமையாகி நிற்கும் நிலையை உணர்த்தும் அருஞ்சொற்றொடர்.
   1.உயிர் ஒடுங்கி உடல் நடுங்கி 2.ஒட்டிய வயிறும் கட்டிய சேலையும்
   3.காடு வாவென வீடு போவென 4.கை கட்டி வாய் புதைத்து
20. அ.கொரோனா உயிர்கொல்லி நோய்
   ஆ.மக்கள் வீடுகளில் இருக்க வேண்டும். மேற்படி வாக்கியங்களை இதே ஒழுங்கில் இணைப்பதற்கு மிகப் பொருத்தமான இணைப்பிடைச்சொல்
   1.ஆகவே 2..அல்லது 3ஆனால் 4.இருப்பினும்

**பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க**

21. தகரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
   1.சத்தம் 2..சந்தம் 3.பந்தம் 4.சொந்தம்
22. முறிந்த பனை என்பது
   1.வேற்றுமைத்தொடர் 2..பெயரெச்சத்தொடர் 3.எழுவாய்த்தொடர் 4.வினையெச்சத்தொடர்
23. பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயரடை
   1.சிவந்த 2..நல்ல 3.அழகான 4.குறுகிய
24. “மரத்தால் விழுந்தவனைக் கண்டேன்” இங்கு விழுந்தவன் என்பது
   1.தொழிற்பெயர் 2.தெரிநிலைவினைமுற்று 3.வினையாலணையும் பெயர் 4.குறிப்பு வினைமுற்று
25. பின்வருவனவற்றுள் இயல்பு புணர்ச்சி இடம்பெற்ற சொல்
   1.ஆணழகன் 2..கிளியிறகு 3.வானவில் 4.பலாவிலை
26. பின்வருவனவற்றுள் முன்னொட்டு ஏற்காத சொல்
   1.அநீதி 2..நோயாளி 3.அவமதி 4.முன்னோக்கு
27. ஓடு என்னும் உருபு கலப்புறு பொருளில் இடம்பெற்ற தொடர்
   1.அரிசியோடு மண் கலந்திருக்கிறது. 2.இதனோடு அதைச் சேர்க்க வேண்டாம்
   3.இவ்வளவோடு நிறுத்திக் கொள்கிறேன் 4.அண்ணன் பசியோடு இருக்கிறான்.
28. வேற்றுநிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்ற சொல்
   1.அந்நியன் 2.அஞ்ஞானம் 3.பத்து 4.முயற்சி

**பொருத்தமற்ற உதாரணம் அமைந்த சொற்றொகுதியை தெரிவு செய்க**

29. 1.ஆக்கப்பெயர் - முதலாளி, பெண்ணியம், மலர்ச்சி
   2.கூட்டுப்பெயர் - வானொலி, கண்காட்சி, கடற்கரை
   3.காரணப்பெயர் - பறவை, நாற்காலி, மண்வெட்டி
   4.இடப்பெயர் - முற்றம், மைதானம், கண்டி

30. 1.வினைத்தொகை – ஏவுகணை, பொழிகதிர், ஓடுமீன்

2.வேற்றுமைத்தொகை – தலைவணங்கினான், இராமன்மகன், மலையருவி

3.பண்புத்தொகை – வட்டநிலா, செந்தாமரை, கரும்பலகை

4.உவமைத்தொகை – மதிமுகம், இராப்பகல், கிளிப்பேச்சு

**புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க**

31. நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவது தொடர்பான……………….ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

1.உடன்படிக்கை 2.வெள்ளறிக்கை 3.ஆவணம் 4.பிரேரணை

32. ஜனாதிபதி தேர்தலுக்குரிய ……….. தாக்கல் செய்வதற்கான முடிவுத்திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

1.பதிவு 2.விஞ்ஞாபம் 3.விண்ணப்பம் 4.வேட்புமனு

33. கொரோனா வைரஸ் காரணமாக மக்களுக்கு அரசு உலர் உணவுகளை ……………. ஆக வழங்கியது.

1.கடன் 2.மூலதனம் 3.அன்பளிப்பு 4.நிவாரணம்

34. மக்கள் வங்கி ஸ்தாபிக்கப்பெற்று எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைவடைந்தமையை கொண்டாடுமுகமாக …………… இடம்பெறவுள்ளது.

1.வைரவிழா 2.பவளவிழா 3.பொன்விழா 4.அமுதவிழா

**வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.**

35. தகுந்த பருவம் வந்தாலன்றி பழங்கள் …………..

1.பழா 2.பழுக்கும் 3.பழாது 4.பழுக்காது

36. மனிதனுக்கு கல்வியைவிட பணிவு, அன்பு, ஊக்கம் முதலான உயர்குணங்கள் ………….

1.முக்கியமானதாகும் 2.முக்கியத்துவம் வாய்ந்ததாகும்

3.முக்கியத்துவமுள்ளது 4.முக்கியமானவையாகும்

**கீழே தரப்பட்ட பாடலை அடிப்படையாகக்கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே அணிமுரசா – வேற்படையும்
வாளுமே கண்ணா வதனமதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு

37. இப்பாடல் உணர்த்துவது

1.பெண்மைச் சிறப்பு 2..அரசுச் சிறப்பு 3.நாட்டுச் சிறப்பு 4.வீரச் சிறப்பு

38. இப்பாடலில் இடம்பெறும் அணி

1.உவமை 2.உருவகம் 3.தற்குறிப்பேற்றம் 4.உயர்வுநவிற்சி

39. இப்பாடலில் வதனம் என்பதன் பொருள்

1.முகம் 2.சந்திரன் 3.குளிர்ச்சி 4.சூரியன்

**கீழே வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

40. அ -பெற்றோர் கட்டுப்பாடுகளை பிள்ளைகளுக்கு விதிக்கிறார்கள்.

ஆ -எப்போது கட்டுப்பாடுகளை மீறலாம் என்று எதிர்பார்த்து பிள்ளைகள் வளர்கிறார்கள்.

இ -சுயகட்டுப்பாட்டினை சிறு பராயத்திலிருந்தே பிள்ளைகளில் விருத்தி செய்ய வேண்டும்.

ஈ -அதற்கென பல அழுத்தங்களையும் நெருக்குதல்களையும் மேற்கொள்கிறார்கள்.

உ-இதன்பொருட்டு பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக பெற்றோர் நடந்துகொள்வது அவசியம்.

1.இ,அ,உ,ஆ,ஈ 2.இ,ஈ,ஆ,அ,உ 3.அ,ஆ,உ,இ,ஈ 4.இ,அ,ஈ,ஆ,உ

**சுருக்கமான வினா விடை**

1. தனிமைப்படுத்தல் நோய் தீர்ப்பதற்கான சிறந்த வழிமுறையாகும். இந்த வாக்கியத்தின் எழுவாய் யாது?
   விடை எழுவாய் - தனிமைப்படுத்தல்
2. பின்வரும் வாக்கியத்திற்குப் பொருத்தமான குறியீடுகளை இட்டு அதனை மீண்டும் எழுதுக.
   நான் அதைப் பார்த்தேனா என்று அவன் கேட்டான்
   ''நான் அதைப் பார்த்தேனா'', என்று அவன் கேட்டான்.
   (இக்கூற்று ஒரு அயற்கூற்று வாக்கியம் . இங்கு வினாக்குறி இடம்பெறாது)
3. மக்களின் நலன்களுக்காக அரசாங்கம் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது. இவ்வாக்கியத்தை செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
   ஊரடங்குச் சட்டம் மக்களின் நலன்களுக்காக அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்டுள்ளது.
4. பாரம்பரிய சமூகத்தில் விளம்பரம் அவசியமற்றிருந்தது. மேற்படி எதிர்மறை வாக்கியத்தை உடன்பாட்டு வாக்கியமாக்குக.
   பாரம்பரிய சமூகத்தில் விளம்பரம் அவசியமாய் இருந்தது.
5. மூர்க்கனும் முதலையும் கொண்டதுவிடா என்றும் கூட்டு வாக்கியத்தைத் தனித் தனி வாக்கியங்கள் ஆக்குக.
   மூர்க்கன் கொண்டது விடான்.
   முதலை கொண்டது விடாது.
6. படித்து முடித்தால் சித்தி அடையலாம். இவ்வாக்கியத்தில் இடம்பெறும் வினையெச்சங்களைத் தருக.
   படித்து
   முடித்தால்
7. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
   அன்புக்கு முண்டோ
   விடை :- அன்புக்கும் உண்டோ
8. ''கல்வியில் பெரியன் கம்பன்'' இங்கு இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு யாது ?
   இல் உருபு
9. பின்வரும் வாக்கியத்தில் காணப்படும் திசைச் சொல் யாது ?

   தரப்பட்டுள்ள அட்டவணையை அடிப்படையாகக் கொள்க.

   விடை :- அட்டவணை – (மராத்தி மொழி)

10. எனக்கு ஒண்டும் வேண்டாம், நான் வரயில்லை. மேற்படி பேச்சு வாக்கியத்தை எழுத்து வழக்கில் எழுதுக.
    எனக்கு ஒன்றும் வேண்டாம். நான் வரவில்லை.
11. ''பிரமச்சரியம்'' என்ற சொல்லின் கருத்துப் புலப்படுமாறு அச்சொல்லை ஒரு வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.
    ஆறுமுக நாவலர் பிரமச்சரிய விரதத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்தார்.
12. ''இறை'' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாகத் தனித் தனி வாக்கியங்கள் எழுதுக.
    என்றும் இறையடி தொழுவோம் (பெயர்)
    நான் கிணற்றை இறைத்தேன். (வினை)
13. தலை காட்டுதல் என்ற மரபுத்தொடர் குறிக்கும் பொருள் யாது ?
    தலை காட்டுதல் - பகிரங்கமாக வெளிப்படுதல்

14. ''என்னிரு கண்மணி யனையாள்'' இதில் பயின்றுள்ள அணி யாது?
உவமை அணி
(உவமை அணியை போல , புரைய . ஒப்ப , மான , அன்ன, அனைய , அற்று, நிகர முதலான உவமை உருபுகள் வாக்கியத்தில் இடம்பெறுவதை கொண்டு அறியலாம்)
15. தரப்பட்ட கூட்ட நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துக.
பிரதம விருந்தினர் உரை, இறை வணக்கம் , பரிசில் வழங்கல், மங்கல விளக்கு ஏற்றல், நன்றியுரை , வரவேற்புரை , தலைமையுரை
மங்கல விளக்கு ஏற்றல்,
இறை வணக்கம்
வரவேற்புரை
தலைமையுரை
பரிசில் வழங்கல்
பிரதம விருந்தினர் உரை
நன்றியுரை
16. பின்வரும் வாக்கியங்களில் அறிவித்தலாக அமைந்த வாக்கியம் , அறிவுறுத்தலாக அமைந்த வாக்கியம் என்பவற்றை இனங்கண்டு எழுதுக.
அ. பரீட்சைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் இடம்பெறும்.
ஆ. மாணவர்கள் பரீட்சைக்கு சமுகமளிக்கும் போது அனுமதி அட்டைகளை எடுத்து வருதல் வேண்டும்.
அ – அறிவித்தல்
ஆ – அறிவுறுத்தல்
17. பின்வரும் வாக்கியத்தில் உள்ள வழுவை நீக்கி வாக்கியத்தை மீண்டும் செம்மையாக எழுதுக.
சோமசுந்தரப் புலவரின் பாடல்கள் எளிமையும் இனிமையும் நிறைந்தது
விடை
சோமசுந்தரப் புலவரின் பாடல்கள் எளிமையும் இனிமையும் நிறைந்தவை.
(எண்வழு இடம்பெற்றுள்ளது)

## விடை தொடர்பான மேலதிக குறிப்புக்கள்

**வினா (1)**

- ஒரு வாக்கியத்தின் உறுப்புக்களாக எழுவாய் , பயனிலை , செயப்படுபொருள் , அடைமொழி என்பன காணப்படுகின்றன.
- வாக்கியம் ஒன்றின் கருத்து எழும் இடம் எழுவாயாகும்.
- வாக்கியத்தின் வினைச்சொல்லை இனங்கண்டு யார் அல்லது எது என்ற வினாவை கேட்பதன் மூலம் எழுவாய் இனங்காண முடியும்.
  இவ்வினாவில் வழிமுறையாகும் என்பது வினைச்சொல்லாகும்
  எது வழிமுறையாகும் என்று வினாவினால் தனிமைப்படுத்தல் என்பது விடையாகும்.

**வினா (3)**

**செய்வினை வாக்கியம்**

கருத்தா அல்லது வினைமுதல் செய்யும் வினை செய்வினை ஆகும். செய்வினையினை கொண்டு அமையும் வாக்கியம் செய்வினை வாக்கியமாகும். இங்கு அமுல்படுத்தியுள்ளது என்பது செய்வினை ஆகும்.
அரசாங்கம் என்பது எழுவாயாகவும் ஊரடங்கு சட்டம் ன்பது செயப்படுபொருளாகவும் அமைந்துள்ளன.
செயப்படுபொருள் காணப்படும் ஒரு செய்வினை வாக்கியத்தில் செயப்படு பொருளை எழுவாயாக அமைத்து எழுதப்படும் வாக்கியம் எழுவாயை மூன்றாம் வேற்றுமை கருத்தாப் பொருளிலும் செய்வினையை படு அல்லது உண் என்ற விகுதிகள் அமைத்தும் எழுதப்படும் வாக்கியம் செயப்பாட்டு வினையாகும்.

**இங்கு**

எழுவாய் - அரசாங்கம்

செயப்படுபொருள் - ஊரடங்கு சட்டம்

செய்வினை - அமுல்படுத்தியுள்ளது.

செயப்பாட்டு வினைக்கு மாற்றினால் ஊரடங்கு சட்டம் ( அரசாங்கம் + ஆல்) அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

**வினா (4)**

எதிர்மறை வாக்கியம் ஒன்றில் அன்று , இல்லை , மாட்டு, என்ற சொற்கள் இடம்பெறலாம் இவற்றை நீக்கி எழுதுவதன் மூலம் உடன்பாட்டு வாக்கியம் அமையும்.

இங்கு அவசியமற்று இருந்தது என்ற சொல்லில் அற்று என்ற சொல் நீக்கி எழுதினால் உடன்பாட்டு வினையாக அமையும்.

பாரம்பரிய சமூகத்தில் விளம்பரம் அவசியமாய் இருந்தது.

**வினா (5)**

தனி வாக்கியங்கள் இணைப்பிடைச் சொற்கள் மூலமாகவும் இணைக்கப்பட்டு கூட்டு வாக்கியங்கள் ஆகின்றன.

இங்கு உம் என்னும் இணைப்பிடைச் சொல் மூலமாக இக் கூட்டு வாக்கியம் இணைக்கப்பட்டுள்ளது.

ஆண்பால் உயர்திணைக்கு ஏற்ற ஆண்பால் உயர்திணை முடிவும்

ஒன்றன்பால் அ.்.றிணைக்கு ஏற்ற ஒன்றன்பால் அ.்.றிணை முடிவும் கொண்டு தனித்தனி வாக்கியங்கள் ஆக்கப்பட்டுள்ளன.

இக்கூட்டு வாக்கியத்தில் அ.்.றிணை ஒன்றன்பால் முடிவினை ஆண்பால் உயர்திணை ஏற்று முடிந்திருப்பது திணைவழுவமைதி ஆகும்.

**வினா (6)**

வினைச்சொற்கள் தமது கருத்து முற்றுப்பெறாது எஞ்சி நிற்பது எச்சங்கள் என அழைக்கப்படும்.

- பெயர்ச்சொல் அல்லது வினைச்சொற்களை தமது கருத்து முற்றுப் பெறுவதற்காக அவை வேண்டி நிற்கும்.
- வினைச் சொற்கள் கருத்து முற்றுப் பெறுவதற்கு பெயர்ச் சொற்களை வேண்டி நின்றால் அவை பெயரெச்சம் எனப்படும்.
  உதாரணம் படித்த மாணவன்
  (இங்கு படித்த என்பது எச்சம் . கருத்து முற்றுப்பெற மாணவன் என்ற பெயர்ச்சொல்லை வேண்டி நின்றது) ஆகவே படித்த என்பது பெயரெச்சம் ஆகும்
- வினைச் சொற்கள் கருத்து முற்றுப் பெறுவதற்கு வினைச்சொற்களை வேண்டி நின்றால் வினை எச்சம் ஆகும்.
  உதாரணம் படித்து முடித்தான்
  முடித்தால் தருவேன்.

இங்கு படித்து, முடித்தால் என்பவை எச்சங்கள். முடித்தான், தருவேன் என்பவை வினைச்சொற்கள். எனவே படித்து, முடித்தால் என்பவை வினை எச்சங்களாகும்.

**வினா (8)**

வேற்றுமை (வேறுபடுவது)

பெயர்சொல்லின் இலக்கணத் தொழிற்பாடு வேறுபடுவது வேற்றுமையாகும்

**வேற்றுமை உருபுகள்**

ஐ - இரண்டாம் வேற்றுமை உருபு

ஆல் - மூன்றாம் வேற்றுமை உருபு

கு – நான்காம் வேற்றுமை உருபு

இல் - ஐந்தாம் வேற்றுமை உருபு

அது – ஆறாம் வேற்றுமை உருபு

கண் - ஏழாம் வேற்றுமை உருபு

**வேற்றுமை எட்டு வகைப்படும்.**

முதலாம் வேற்றுமை எட்டாம் வேற்றுமைகளுக்கு உருபுகள் இல்லை.

**வேற்றுமைப் பொருள்**
முதலாம் வேற்றுமை – எழுவாய்ப் பொருள்
இரண்டாம் வேற்றுமை – செயப்படுபொருள்
மூன்றாம் வேற்றுமை – கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி
நான்காம் வேற்றுமை - நட்பு, பகை, கொடை, முறை, தகுதி முதலியவை
ஐந்தாம் வேற்றுமை – நீங்கல், ஒப்பு ,எல்லை , ஏது
ஆறாம் வேற்றுமை – கிழமைப் பொருள்
ஏழாம் வேற்றுமை - இடப்பொருள்
எட்டாம் வேற்றுமை - விளித்தற்பொருள் என்பவை ஆகும்.

**சொல்லுருபுகள்**
ஒரு வேற்றுமை உருபுக்குப் பதிலாக சொல்லுருபுகளும் இடம்பெறும்.
ஆல், ஆன் - கொண்டு
ஒடு , ஓடு – உடன்
கு – பொருட்டு நிமித்தம் ,ஆக
அது – உடைய
**வினா 17**
**வழுக்கள்**
அவன் வந்தாள் - பால் வழு
அது வந்தான் - திணை வழு
பாடல்கள் உள்ளது – எண் வழு
அவன் வந்தேன் - இட வழு
நேற்று வருகிறேன் - கால வழு
நாய் கர்ச்சித்தது – மரபு வழு

ஒரு பொருளைக்காட்டி சிறிதா பெரிதா என்பது – வினா வழு
வட்டுக்கோட்டைக்கு வழி எது என்றால் துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு எனக் கூறுவது – விடை வழு

## மூத்தம்மா (சிறுகதை)

1. மூத்தம்மா சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு
   அ. மூத்தம்மா என்ற பாத்திரத்தின் முக்கியத்துவம்
   ஆ. காசிம் , மூத்தவாப்பா என்ற பாத்திரங்கள் கதை வளர்ச்சிக்கு உதவுமாற்றை எடுத்தக் காட்டுக.
2. மூத்தம்மா என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவன குறித்துத் தெளிவுபடுத்துக.
   அ. ஆசிரியர் கூற விழையும் செய்தி
   ஆ. மூத்தம்மா பற்றிய காசிமின் விபரிப்பு
   இ. கிராமியப் பழக்கவழக்கங்களும் மூட நம்பிக்கைகளும்
3. மூத்தம்மா கதையில் இடம்பெறும்
   அ. மூத்தம்மாவின் செயற்பாடுகள்
   ஆ. கையாளப்பட்ட அணிச் சிறப்பு
   இ. மொழிநடை ஆகியன குறித்து விபரிக்குக.

## தற்காலக் கவிதைகள்

1. ''தேயிலைத் தோட்டத்திலே'' எனும் கவிதையில்
   அ. மலையக மக்கள் வாழ்வின் அவலம்
   ஆ. மலைய மக்கள் குறித்த கவிஞரின் ஆதங்கம்
   என்பன வெளிப்டுமாற்றை விபரிக்குக.

2. ‘‘குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்’’ கவிதையில்
   அ. கவிஞரின் மனதைக் குதூகலிக்கச் செய்யும் நிகழ்வுகள்
   ஆ. உழவர்களின் சிறப்பு
   இ. விருந்தோம்பலின் சிறப்பு

   புலப்படுமாற்றை விளக்குக.
3. சீறி ஓடாத வருங்கால மனிதநதி கவிதையில்
   அ. எழுதத் தெரியாமையின் அவலம்
   ஆ. கவிஞரின் பரிதாப உணர்ச்சி
   இ. கையாளப்பட்ட அணிகள்

   ஆகியன குறித்து விபரிக்குக.

## அற்றைத் திங்கள்

1. அற்றைத் திங்கள் எனும் நாடகத்தை அடிப்டையாகக் கொண்டு
   அ. போரின் அவலமும் துன்பங்களும்
   ஆ. பாரிமகளின் துயரநிலை

   ஆகியன குறித்து விபரிக்குக.
2. அற்றைத் திங்கள் எனும் நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றிற்கு விடையளிக்குக.
   அ. போருக்கு முன்னரான போருக்குப் பின்னரான பறம்பு மலையின் நிலை
   ஆ. பாரி மன்னனின் சிறப்புக்கள்

**விடைக்குறிப்பு**

1. அ. மூத்தம்மா பாத்திரத்தின் முக்கியத்துவம்
   - கதையில் இடம்பெறும் முதன்மைப் பாத்திரம்
   - கதையின் ஆரம்பம் முதல் இறுதிவரை மூத்தம்மாவின் ஆளுமைகள் , செயற்பாடுகள் குணாதிசயங்கள் வெளிப்படல்
   - குடும்பத்தில் சுறுசுறுப்பாக இயங்கும் பாத்திரம்
   - பேரப்பிள்ளைகள் மீதும் பாசம் கொண்டவர்
   - கிராமத்தின் வழக்காறுகள் நிகழும் செயற்பாடுகள் குறித்து அறிந்து வைத்திருப்பவர்

   ஆ. **காசிம்**
   - காசிம் மூத்தம்மாவின் பேரன்
   - கதையில் கதை சொல்லியாக இயங்கி கதை வளர்ச்சிக்கு உதவும் பாத்திரம்
   - மூத்தம்மாவின் குணாதிசயங்கள் , தோற்றப்பொலிவு ஆகியனவற்றை வெளிக்கொணர்ந்த பாத்திரம்
   - மூத்தம்மா மீது அன்பும் மரியாதையும் கொண்டவர்
   - மூத்தம்மாவின் செயற்பாடுகளை அவதானித்து தனது பயம் போக்கி தைரியத்தை வளர்த்த பாத்திரம்

   **மூத்த வாப்பா**
   - முத்தம்மாவின் கணவர்
   - மூத்தம்மா மீது அன்பும் காதலும் கொண்டவர்
   - மூத்தம்மாவை கூட்டுக்கரத்தையில் பக்குவமாக அழைத்துச் செல்பவர்
   - பேரப் பிள்ளைகள் மீது பாசம் கொண்டவர்
   - மூத்தம்மாவிற்கு உதவி செய்பவர்

2. ஆ. மூத்தம்மாவின் ஆளுமைச் செயற்பாடுகள்

   கிராம வாழ்கையில் தனிநபர் ஒருவர் தன் நடத்தைகளால் பெறும் சமூகச் செல்வாக்கு , அங்கீகாரம்

   ஆ. மூத்தம்மாவின் தோற்றப்பொலிவு காசிமின் மனவெளிப்பாடாக சித்திரிக்கப்பட்டுள்ளது.

- கிராமத்தின் முடிசூடாக் குட்டிராணியாக கிராமத்தின் பொது மனுசியாக மூத்தம்மா இருந்தா.

அனுபவம் பழுத்து அவவிடம் அறிவு தேஜஸ் சட்டெனத் தெரியும்.

- மூத்தம்மாவின் காதில் பெரிய தோடுகள் மேலிருந்து கீழாக நேர் வரிசையில் தொங்கிக் கொண்டிருக்கும் . அது அல்லுக்குத்து எனப்படும்.
- கழுத்தில் கருகமணிமாலை மின்னிக் கொண்டிருக்கும்
- கையில் அகல செப்புக் காப்புகள் என அமர்க்களமாய் பார்க்க அம்சமாய் இருப்பா.

### இ. கிராமியப் பழக்க வழக்கங்கள்

- மரத்தடியில் அமர்ந்து கதைபேசி மகிழல்
- மாட்டில் பால் கறத்தல், அரிசி இடித்து காலைச் சிற்றுண்டி செய்தல்
- மாட்டு வண்டியில் பயணம் செய்தல்
- நேர்த்திக் கடன் செய்தல்
- ஒற்றுமையான வாழ்வு உதவும் மனப்பாங்கு
- பனையோலையில் பெட்டி, பாய் இழைத்தல்
- வைத்தியசாலை செல்லாது வீட்டில் பிரசவம் பார்த்தல்

**மூட நம்பிக்கை**

- பக்குல் கத்துவது யாராவது இறப்பதற்கு அறிகுறி என நம்புதல்
- நெருப்புத் தணலில் உப்பு போட்டால் பக்குல் பறந்து விடும் என்ற நம்பிக்கை
- நோய்களுக்கு கைம்மருந்து செய்து குணப்படுத்தல்

3. அ. மூத்தம்மா சுறுசுறுப்பாக இயங்குபவர்

- அதிகாலையில் எழுந்து மாட்டில் பால் கறந்து, பேரப்பிள்ளைகளுக்கு முறுகக் காய்ச்சிய பாலை அருந்தக் கொடுத்தல்
- அரிசி இடித்து பிட்டோ , றொட்டியோ செய்து கொடுத்தல்
- பனையோலையில் பெட்டி , பாய் இழைத்தல்
- ஊரில் யாருக்கும் நோய் என்றால் முதலில் சென்று உதவுதல்
- பேரப்பிள்ளைகளுக்கு கதை சொல்லி தூங்க வைத்தல்
- நோய் வந்தால் படுக்கையில் படுக்கமாட்டா
- ஆடாதோடையும் கொத்தமல்லியும் அவித்துக் குடித்து எழுந்து நடப்பா கைராசிக்காரி என்று பெயர் எடுத்தவர்

### ஆ. உவமை அணி

- தயிர்ச் சட்டியின் வடிவத்தில் வானில் கிடந்த நிலா
- அடிவயிற்றில் உரல் உருளுவது போல விசித்திரம்

நெருப்புத் தணல் மாதிரி சுட்டது மூத்தம்மா கை

### உருவகம்

- வெள்ளைக் கொக்கு வெடவெடத்தது
- வெள்ளைக் கொக்காக மூத்தம்மா உருவகிக்கப்பட்டுள்ளார்

இ. கிழக்கிலங்கை முஸ்லிம் பிரதேசத்தைக் களமாகக் கொண்ட கதை என்பதால் அப்பிரதேச பேச்சு வழக்கு யதார்த்தப் பண்புடன் கையாளப்படல்

- சிறிய சிறியவசனம் உணர்ச்சி நிறைந்த சொற்பிரயோகம்
- பாத்திர விபரிப்பு கதைகள் வர்ணனை பொருத்தமுற அமைந்துள்ளது.

## தற்காலக் கவிதைகள்

1. அ. இந்நாட்டுக்காக உழைத்து தம் உயிர் உடல் அர்ப்பணித்து இறந்த அவர்களுக்கு ஓர் இரக்க வார்த்தை கூறுவார் இல்லை.
   - கல்லறை எடுப்பவர் இல்லை
   - அவர்களுக்காக உள்ளன்புடன் பரிதாபப்பட எவரும் இல்லை.
   - நினைவு நாள் கொண்டாட எவரும் இல்லை.

- அவர்களைப் புதைத்த இடத்தில் காட்டுப் பூவைத் தானும் பறித்துப் போட எவரும் இல்லை.

- தந்தையைப் புதைத்த இடத்தில் மகன் ஏறி மிதித்து நடக்கும் அவலம்.

ஆ. மலைய மக்களின் அவல வாழ்வைக் கவிதை மூலம் வெளியுலகிற்கு தெரியப்படுத்தல்

- அவர்களது அவலங்களைக் கண்டு வேதனைப்படல்.

இந்நாட்டு மக்களதும் அரசினதும் கோரமுகத்தை இரக்கமற்ற தன்மையை ஏளனம் செய்து ஆதங்கத்துடன் வெளிப்படுத்தல்

"தன்னை மறைக்கத்தானோ
அவ்விறைவனும் தளிர்
பசும் புல்லால் தரை மறைத்தனனோ" என்ற வரியில் கவிஞரின் ஆதங்கம் வெளிப்படல்.

2. **"குழந்தை என எனது மனம் குதூகலிக்கும் ……"**

அ. – ஓடும் நீரை எதிர்த்தோடும் மீன்கள்

- ஊரும் சிற்றெறும்பின் ஒழுங்குமுறை வாழ்க்கை ஆடும் பூமரங்களில் அசையும் இலைகள்
- அதிகாலை எழுந்து இரை தேடவரும் பறவை
- மூடும் இமைக்கடங்கா முழுநிலவு விழிகள்
- முந்தானைச் சேலை கட்டும் செந்தாழம் பூக்கள் கூடுகின்ற இயற்கை யெழில்

**ஆ. உழவர்களின் சிறப்பு**

- உழவர்கடின உழைப்பு
  தேனருவி என வழியும் ஏருழவன் வியர்வை
- குன்றென நிமிர்ந்த தோள்கள்
  உழைப்பால் வலிமை பெற்ற உடல் உடையவர்
- உலகத்திற்கு உணவளித்து உண்பவர்
  குணக்குன்றாய் திகழ்பவர்

**இ. விருந்தோம்பலின் சிறப்பு**

- கன்றினது உடல் நக்கிக் கனைக்கின்ற பசுக்கள்
- கரைந்தழைத்து இரையுண்ணும் காக்கைகளின் கூட்டம்
- காக்கைகள் கரைந்தழைத்து உணவு உண்ணல்
  பசி போக்கும் உழவர்களின் ஈரமனம்
  இன்முகம் காட்டும் இல்லாள்முகம் ஆகியன விருந்தோம்பலின் சிறப்பை எடுத்துரைக்கின்றன.

3. **சீறி ஓடாத வருங்கால மனித நதி**

அ. எழுதத் தெரியாவிடின் எதிர்காலம் இல்லாது முகவரி தொலைத்த மனிதனாகப் போய்விடலாம்.

- காதல் உணர்வை வெளிப்படுத்த முடியாது.
- எழுத்தறிவு இல்லாவிடின் அழகும் இளமையும் கூட பயனற்றுப் போகும்
- உணர்வுகள் உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாது.
- சீறி ஓட முடியாது சிறு துளியாய் உறைந்து ஒடுங்கி அடங்கிவிடும் மனிதனது வாழ்க்கை.

ஆ. பரிதாபத்தின் மொத்த வடிவமாக இருந்தான் எனல்

- கையொப்பம் இடமுடியாத அவனது சிரிப்பைச் செத்த சிரிப்பு எனல்
- அவனது கைநாட்டில் மேல் தனது இதயம் கழன்று கதறியதாக கூறல்
- காதலைப் வெளிப்படுத்த முடியாத அவனது நிலைமை எண்ணி வேதனைப்படல்
- அவனைப் பார்த்தது முதல் தன்னை இழந்து தன் வேலைகளைப் பார்க்க முடியாது போனதாக குறிப்பிடல் கவிஞரின் பரிதாப உணர்வை வெளிப்படுத்துகின்றது.

**அற்றைத் திங்கள்**

1. அ. போரின் அவலங்களும் துயரமும் தாலாட்டுப் பாடல் மூலம் பொருத்தப்படல்
   - அத்தை மாமன் மீளவில்லை
   - தொட்டில் வரை இரத்தக் கறை
   - நிலவு வரை பற்றிய தீப்பந்தம் போரால் ஊர் எரிந்தழித்தல்
   - போர் மக்கள் வாழ்வை வேரோடு பறித்தெடுக்கும் அவலம்
   - உறவுகளை பிரிதல், உடைமை இழப்பு, ஏதிலிகளாக அலைய வைத்தல்

   ஆ. **பாரிமகளீரின் துயரம்**
   - போரில் தந்தையை இழந்தமை
   தங்களது நாட்டை இழந்து ஏதிலிகளாக நாட்டைவிட்டு வெளியேறல்
   - தமது மக்களை உறவுகளை பிரிந்து வாழும் அவல நிலைக்கு உட்பட்டமை

2. அ. **போருக்கு முன்னரான பறம்பு மலையின் நிலை**
   - பாரி மன்னனின் வளமான ஆட்சி.
   - வரகு, எள் நிறைந்த வளமான தேசம்
   - யாராலும் வீழ்த்த முடியாத வீரம் மிக்க தேசம் . இயற்கை அழகு, சுனைநீர் தேன் மிக்க தேசம். அரசனும் மக்களும் நட்புடறவுடன் மகிழ்ந்திருந்த தேசம்

   **போரின் பின்னரான நிலை**

   பாரி மன்னன் இறந்து விடல்
   நாடு மூவேந்தர் வசமானது
   வீரர் , சொத்துக்கள் அழிந்து போனமை
   பாரி மகளிர் அநாதைகள் ஆயினர்
   நாட்டு மகளிர் ஏதிலிகளாக்கப்படல்

   **ஆ. பாரி மன்னனின் சிறப்புக்கள்**
   - பறம்பு மலையை ஆண்ட அரசன்
   - வீரம் செறிந்தவன்
   - பாரி இருந்தால் பேச்சுக் கொடுப்பார்
   மதுவிலும் புலாலிலும் களித்திருந்த நட்பு
   நம்முடையது என்ற கபிலர் கூற்று
   பாரி மன்னன் கபிலரிடம், மக்களிடம் கொண்ட நட்பு அன்பு வெளிப்படல் தனது பிள்ளைகளுக்கு தந்தையாய் தாயாய் அன்பு செலுத்தி வளர்த்தல்

**சுருக்கமான விடை எழுதுக.**

01. ''பொய்கை ஊரன் கேண்மை செய்து இன்புற்றனெம் செறிந்தன வளையே''
   அ. இங்கு தலைவனின் சிறப்பு எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?
   நல்ல தேர்களையும், பொய்கைகளையும் உடைய ஊர்த் தலைவன் என சிறப்பிக்கப்படுகின்றான்.
   ஆ. வளையல்கள் செறிந்தமைக்கான காரணம் யாது?
   தலைவனுடைய நட்பை (காதலை) நினைத்தமையால்

02. ''நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து குளித்து மணற் கொண்ட கல்லா விளமை''
   அ. கல்லாவிளமை என்பது யாது?
   வஞ்சனையில்லாத இளமை
   ஆ. இப் பாடலடி இடம் பெற்ற நூல் யாது?
   புறநானூறு

03. ''கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
   குழாஅத்துப் பேதை புகல்''
   அ. கழாஅக்கால்
   ஆ. குழாஅத்து என்னும் தொடர்கள் புலப்படுத்துவன யாவை?
   அ. கழுவாதகால்
   ஆ. அவையிடத்து

04. இவ்விரு பெரு மாதரின் இலட்சியங்களை நாம் கண்டறிதல் கூடுமானால் இலக்கிய இன்பம் சித்திக்கும்''

அ. பெருமாதர்களும் யாவர்?
கண்ணகி, பாண்டிமாதேவி

ஆ. பெருமாதர்களும் பாத்திரங்களாக விளங்கும் காப்பியம் எது?
சிலப்பதிகாரம்

05. ''கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலோ மென்றான், மதி இழந்து தன் வாயிழந்து அருந்தவன் மறைந்தான்''

அ. கட்டுரை இழக்கிலோம் என்றவன் யார்?
அரிச்சந்திரன்

ஆ. அருந்தவன் எனக் குறிப்பிடப்படுபவன் யார்?
விசுவாமித்திரர்

06. ''பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த நிதியிழந்தனம்.......''

அ. பதியிழந்தனம் என்பதன் மூலம் குறிப்பிடப்படும் விடயம் யாது?
நாட்டை இழந்தோம்

ஆ. இங்கு பாலன் எனக் குறிப்பிடப்படுபவன் யார்?
லோகிதாசன்

07. ''என்னத்துக்கு, இந்த வண்டிலுக்கு குடிலப் போல ஒல கட்டினீங்க''
''மழ வெய்யில்ல நனயாம அவவ கொண்டு போகணும்''

அ. ''அவவ'' என்று குறிப்பிடப்படுபவர் யார்?
மூத்தம்மா

ஆ. இவ் வரிகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் உணர்வு யாது?
அனபுணர்வு

08. அ. ''அத்திறம் நிற்க'' கூற்றைக் கூறியவர் யார்?
சேரமாதேவி

ஆ. இக் கூற்றின் மூலம் குறிப்பிடப்படும் மகளிர்கள் யாவர்?
கண்ணகி, பாண்டிமாதேவி

09. இந்த ராஜ்சியத்தின் அரசியைப் போல நானுமொரு இளவரசனானேன்

அ. அரசி எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
மூத்தம்மா

ஆ. இளவரசன் என்று குறிப்பிடப்படுபவர் யார்?
காசீம்

10. ''கைராசிக்காரி நீங்கள் தான் மாமி என்ர தலப்புள்ளய ஏந்தனும்''

அ. இங்கு கைராசிக்காரி எனக் குறிப்பிடப்படுபவரின் பெயர் யாது?
மூத்தம்மா

ஆ. தலப்புள்ள எனக் குறிப்பிட்படுவது யாது?
மூத்தபிள்ளை , முதற் பிள்ளை

11. ''ஆழப்புதைந்த தேயிலைச் செடியின் அடியிற் புதைந்த அப்பனின் சிதை மேல் ஏழை மகனும் ஏறி மிதித்து''

அ. இக் கவிதையை எழுதியவர் யார்?
சி.வி. வேலுப்பிள்ளை

ஆ. மலையக மக்களின் நிலை இக் கவிதையில் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது?
துந்தையைப் புதைத்த இடத்தில் தனையன் ஏறி நின்று வேலை செய்யும் துன்பியல் நிலை எடுத்துக் காட்டப்படுகின்றது.

12. தேனருவி என வழியும் ஏருழவன் வியர்வை, குன்றெனவே நிமிர்ந்தோங்கி குதூகலிக்கும் தோள்கள்.

அ. உழவன் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றான்?

உழவனது வியர்வையை தேனருவி என்றும், தோள்கள் மலை போல் நிமிர்ந்து நிற்பதாகவும்சிறப்பிக்கப்படுகின்றான்.

ஆ. இவ் அடியில் காணப்படும் உவமை அணிகளை எடுத்துக் காட்டி விளக்குக?

| | |
|---|---|
| உவமானம் - தேனருவி | உவமானம் - குன்று |
| உவமேயம் - வியர்வை | உவமேயம் - தோள்கள் |
| பொதுத்தன்மை – வடிதல் | பொதுத்தன்மை – நிமிர்ந்திருத்தல் |

13. "முந்தானைச் சேலைகட்டும் செந்தாழம் பூக்கள்"

அ. சேலை கட்டும் செந்தாழம் பூக்கள் யாவர்?

பெண்கள்

ஆ. இதில் பயின்றுள்ள அணி யாது?

உருவக அணி

14. "இடது கையின் பெருவிரலை ஊன்றி வெட்கிச் சிரித்தான்"

அ. "பெருவிரலை ஊன்றுதல் என்பது எதனைக் குறிக்கிறது?

கைவிரல் அடையாளமிடல்

ஆ. இளைஞன் வெட்கிச் சிரித்தமைக்கான காரணம் யாது?

எழுத்தறிவின்மையை

15. மீசைக்கு விதைதூவி இளமை மழை பெய்ய பயிர் முளைத்த பருவம்

அ. இளமை மழை எனக் குறிக்கப்படுவது எது?

இளமைப்பருவம்

ஆ. பயிர்முளைத்தல் என்பது எதனைக் காட்டுகின்றது?

மீசை அரும்புதல்

16. "…..இற்றைத் திங்கள் இவ் வெண்ணிலவில் வென்றெறி முரசின் வேந்தரெம் குன்றும் கொண்டார்"

அ. இங்கு முரசின் வேந்தர் யாவர்?

சேரன், சோழன், பாண்டியன்

ஆ. "எம் குன்று" என்பதில் குறிப்பிடப்படும் குன்று எது?

பறம்பு மலை

17. "ஏலம் பூ வாய் பொசுங்க
எரியிறது தீக் கொழுந்து
காலப்புனல் கனக்கும்
கண்ணீரையும் சுமந்து"

அ. ஏலம் பூ வாய் என்பதால் நீர் விளங்கிக் கொண்வது யாது?

நறுமணமுள்ள வாய்

ஆ. காலப்புனல் என்பதில் இடம் பெற்ற அணி யாது?

உருவக அணி

18. "அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையம் உடையேம் எம் குன்றும் பிறர் கொளார்"

அ. அற்றைத் திங்கள் என்பதன் பொருள் யாது?

அந்த மாதம்

ஆ. எந்தையம் உடையேம் என்று கூறுவோர் யாவர்?

அங்கவை, சங்கவை

19. பறம்பு மலை மக்களின் அன்பை எப்படி விட்டுச் செல்வது". இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது? சங்கவையால் அங்கவைக்கு

20. 'நம் மலைக் குறத்திகள் நமக்கு தொடுத்துத் தந்த குறிஞ்சி மலர்களின் மாலை' ,

அ. இக் கூற்று யாரால் கூறப்பட்டது?

சங்கவையால்

ஆ. குறிஞ்சி மலர்கள் எத்தனை வருடத்திற்கு ஒரு தடைவ பூக்கும்?

12 வருடத்திற்கு ஒரு தடைவ

21. உயிர் வாழ்வதற்காக இலட்சியத்தைக் கைவிடுதல் ஈமஞ் சேர் மாலை போல இழிந்திடப்பட்ட செயலாகும்

அ. இவ் அடியின் ஊடாக வலியுறுத்தப்படும் விடயம் யாது?

மனிதனுக்கு இலட்சியம் அவசியம்

ஆ. ஈமஞ்சேர் மாலை போல் இழிந்திடப்பட்ட செயல் என்பதனை விளக்குக?

பிணத்திற்குப் போடப்பட்ட மாலை தீண்டத்தகாது. அது போல உயிர் வாழ்வதற்காக இலட்சியத்தைக் கைவிடுதல் இழிந்த செயல்.

22. ''ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் பேதை
பெரும் செல்வம் உற்றக்கடை''

அ. அதில் ஏதிலார் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

உறவல்லாதவர்

ஆ. தமர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

உறவினர்

23. ''என் வெள்ளைக் கொக்கு தூங்கிக் கொண்டிருந்தது''

அ. இங்கு வெள்ளைக் கொக்கு என விளிக்கப்படுபவர் யார்?

மூத்தம்மா

ஆ. இவ்வரி இடம்பெற்ற சிறுகதையை எழுதியவர் யார்?

ஓட்டமாவடி அறபாத்

24. ''இஞ்சால வா மகன் மையத்த தூக்கப் போறாங்க''

அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டுள்ளது?

றகுமாமாமியால் காசிமுக்கு

ஆ. மையத்து என்பதன் கருத்து யாது?

சடலம்

25. சந்தூக்கின் பின்னால் ஓடிச் சென்றேன்.

அ. சந்தூக்கு என்றால் என்ன?

பிரேதத்தை சுமந்து செல்லும் பெட்டி

ஆ. அதன் பின்னால் ஓடிச் சென்றவர் யார்?

காசிம்

26. ''நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்''

அ. பேதையரின் செயல் ஒன்றைக் குறிப்பிடுக?

எவரிடத்தும் அன்பு செய்யாமை

ஆ. நாடாமை, நாரின்மை என்பவற்றின் பொருளைத் தருக?

நாடாமை – நாட வேண்டியவற்றிற்கு நாடாமை

நாரின்மை – எவரிடத்தும் அன்பு இல்லாமை

27. உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினுஞ்
செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்''

அ. இங்கு குறிப்பிடப்படும் உயிருடன் சென்ற ஒரு மகள் யார்?

பாண்டிமாதேவி

ஆ. செயிருடன் வந்த சேயிழை யார்?

கண்ணகி

28. ''வெண்ணிற மேகங்கள் நிலவை மூடி மூடி ஆலிங்கனம் செய்கையில் உறை தயிரின் பாலாடையோ என வியக்க வைத்தது அதன் அழகு''

அ. ஆலிங்கனம் என்பதன் பொருள் யாது?

தழுவுதல்

ஆ. வியக்க வைத்த அழுகு எது?

நிலவின் அழகு

29. "….. நரகம் புகினும் எள்ளேன்…

அ. இக்கூற்றைக் கூறியவர் யார்?

மாணிக்கவாசகர்

ஆ. எள்ளேன் என்பதன் பொருள் யாது?

அஞ்சேன்

பின்வரும் செய்யுட்பகுதி மற்றும் உரைப் பகுதியை படித்தது அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

**வினா(01)**

**தச்சன் செய்த சிறுமா வையம்**
**ஊர்ந்து இன்புறாஅன் ஆயினும் கையின்**
**ஈர்த்து இன்புறூம் இளையோர் போல**
**உற்று இன்புறே எம் ஆயினம் நற்றோர்ப்**
**பொய்கை ஊரன் கேண்மை**
**செய்து இன்புற்றனெம் செறிந்தன வளையே**

அ. இப் பாடலில் தலைவனின் சிறப்ப யாது?

நல்ல தேர்களையும், பொய்கைகளையும் உடையவன் என்று சிறப்பிக்கப்படுகின்றான்

ஆ. இப் பாடலில் கையாளப்பட்டுள்ள அணியை எடுத்துக் காட்டி விளக்குக?

உவமை அணி

உவமானம் - சிறு தேருருட்டி விளையாடும் சிறார்கள்

உவமேயம் - தலைவன் நினைவை மனதில் சுமந்து இன்புறும் தலைவி

பொதுத்தன்மை - இன்னொன்றைக் கருதி இன்பமடைதல்

**வினா(02)**

**பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த**
**நிதியிழந்தனம் இனி நமக்குளதென நினைக்குந்**
**கதியிழக்கினுங் கட்டுரையிழக்கிலோ மென்றான்**
**மதியிழந்து தன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்**

அ. அரிச்சந்திரன் எவற்றை எல்லாம் இழந்ததாகவும், எதனை இழக்கமாட்டேன் எனவும் கூறுகிறான்?

நாட்டை இழந்ததாகவும், பாலனை இழந்ததாகவும், செல்வம் அனைத்தையும் இழந்ததாகவும் கூறுகின்றான். வீடுபேறாகிய நற்கதியை இழந்தாலும் தனது வாய்மையை இழக்கமாட்டேன் என அரிச்சந்திரன் கூறுகின்றான்.

ஆ. அருந்தவன் எனக் குறிப்பிடப்படுபவன் யார்?

விசுவாமித்திரர்

**வினா(03)**

**ஓடுகின்ற நீரையெதிர்த் தோடுகின்ற மீன்கள்**
**ஊருகின்ற சிற்றெறும்பின் ஒழுங்குமுறை வாழ்க்கை**
**ஆடுகின்ற பூமரங்கள் அசைகின்ற இலைகள்**
**அதிகாலை எழுந்துஇரை தேடவரும் பறவை**
**மூடுகின்ற இமைக்கடங்கா முழுநிலவு விழிகள்**
**முந்தானைச் சேலைகட்டும் செந்தாழம் பூக்கள்**
**கூடுகின்ற இயற்கையெழில் குதூகலத்தைத் தருமே**
**குழந்தையென எனது மனம் குதிதிதாடும் தினமே**

அ. கவிஞர் உள்ளமானது குழந்தை போலக் குதூகலிப்பதற்கான காரணங்களை விளக்குக?

நீரை எதிர்தது ஓடும் மீன்கள், சிற்றெறும்பின் ஒழுங்க முறையான வாழ்வு, பூமரங்கள் ஆடுதல், இலைகள் அசைதல், அதிகாலை எழுந்து இரை தேட வரும் பறவை, முந்தானைச் சேலை கட்டும் செந்தாழம் பூக்கள் என்பவற்றினைப் பார்க்க கவிஞரின் உள்ளம் குதூகலம் கொள்கின்றது

ஆ. இயற்கையினூடாக நாம் கற்றுக்கொள்ளக்கூடியவை எவை?

ஒழுங்கு முறையான வாழ்க்கை , இயற்கை அழகினை இரசித்தல், அதிகாலை எழுந்து இரை தேடல் முயற்சி, எதிர் நீச்சல் போடுதல் என்பன நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை யாகும்.

**வினா(04)**

**தென்றலிலே அசைந்தாடும் செந்நெல்வயற் கதிர்கள்**
**தேனருவி எனவழியும் ஏருழவன் வியர்வை**
**குன்றெனவே நிமிர்ந்தோங்கிக் குதூகலிக்கம் தோள்கள்**
**குணக்குன்றாய் உழைத்துண்ணும் குலவிளக்காம் மனிதன்**
**முன்றலிலே மண்ணளைந்து முழங்காலில் தவழ்ந்து**
**முத்துதிர நகை செய்யும் சொத்தாகும் மழலை**
**குன்றினது உடல் நக்கிக் கனைக்கின்ற பசுக்கள்**
**குரைந்தழைத்து இரையுண்ணும் காக்கைகளின் கூட்டம்**

அ. உழவனின் கடுமையான உழைப்பு எவற்றின் மூலம் புலப்படுகின்றது?
உழவனின் வியர்வையானது தேனருவி போல வழிகின்றது எனவும், அவனது தோள்கள் குன்றைப் போல நிமிர்ந்து நிற்பதாகவும் கவிஞர் கூறுவதிலிருந்து உழவனின் கடுமையான உழைப்பு புலப்படுகின்றது.

ஆ. இப் பாடலில் உள்ள உருவக அணியை இனங்கண்ட விளக்குக?
குணக்குன்று
குணமாகிய குன்று என்று உருவகிக்கப்பட்டுள்ளது.

**வினா(05)**

**ஆழப் புதைந்த**
**தேயிலைச் செடியின்**
**அடியிற் புதைந்த**
**அப்பனின் சிதைமேல்**
**ஏழை மகனும்**
**ஏறி மிதித்து**
**இங்கெவர் வாழவோ**
**தன்னுயிர் தருவன்**

அ. ஏழை மகனின் பரந்த நோக்கு எவ்வாறு புகழப்படுகிறது?

தந்தையைப் புதைத்த இடத்தில் மகன் ஏறி நின்று மற்றவர் வாழ்வதற்காக வேலை செய்வதே பரந்த நோக்காகக் காட்டப்பட்டுள்ளது.

ஆ. கவிஞன் எதனை வெளிப்படுத்த விழைகின்றார்?

மலையக மக்களின் அவல வாழ்க்கையை புலப்படுத்துகின்றார்

**வினா(06)**

புழுத்த நாயொன்றை இங்கே காண்கின்றார். பிற உயிர்களைத் தம்முயிரிற் கண்ட சம நெறிச் செல்வராகிய அவர் தமக்கும் நாய்க்குமிடையே ஒற்றமை காண்கின்றார். அதன் துன்பத்தை தமக்கு வந்ததாகப் பாவிக்கின்றார். நாயைத் தோளிலே தூக்கி வைத்துக் கொண்டு முத்தியுலக வாயிலடைகிறார். நாயை வெளியே விட்டு உள்ளே புகுமாறு முத்தி உலகம் உத்தரவிடுகின்றது. இந்த நாய்க்கு உரிமை இல்லாத முத்தி உலகம் எனக்கு வேண்டாமென்று மறுத்துக் கூறுகின்றார்.

அ. தர்மர் சமநெறிச் செல்வர் எனப் போற்றப்படக் காரணம் யாது?
நாய்க்கு கிடைக்காத முத்தியுலகம் தனக்கு வேண்டாமென்று அறத்தை இலட்சியமாகக் கொண்டு சம நிலையில் நின்றதை கொண்டே தர்மர் அவ்வாறு போற்றப்பட்டார்.

ஆ. இச் சம்பவம் இடம் பெற்ற காப்பியம் யாது?
மகாபாரதம்

**வினா(07)**

(அருவியின் ஆர்ப்பரிப்பு, பறவைகளின் பேச்சொலி, இலைகளின் சலசலப்பு.... இவற்றைக் காது கொடுத்துக் கேட்கின்றார்.) இப்போ... இந்த மலையைப் பிரிவது மலையை விடக் கூடுதலாகக் கனக்கிறதே . ஆனால் என் அருமைச் செல்வங்களே ..... புறப்பட வேண்டியது தான். புறம்பு மலையின் இனிய சுனை நீரில் ஒரு முடக்குக் குடியுங்கள்.

அ. பறம்பு மலையின் இயற்கை வளம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?
அருவிகளின் ஆர்ப்பரிப்பு, பறவைகளின் பேச்சொலி, இலைகளின் சலசலப்பு என்பன பறம்பு மலையின் இயற்கை வளங்களாகும்.

ஆ. ‘‘மலையைப் பிரிவது மலையை விடக் கூடுதலாகக் கனக்கிறதே’’ என்ற கூற்றின் மூலம் உணர்த்த முற்படுவது யாது?
அவர்களின் பிரிவுத்துயரை உணர்த்துகின்றது.

**வினா(08)**

தசரதன் இரண்டு இலட்சியங்களிடையே ஊசலாடுகின்றான். ஒன்று அரசியல். மற்றயது சத்தியம். இவ்விரண்டில் ஒன்றைத் தெரிவு செய்வதில் அவன் திண்டாடுகின்றான். அரசியற் கொள்கையின்படி மூத்த புதல்வனுக்கு முடி சூட்டுவதா? ஆல்லது கைகேகிக்குக் கூறிய சத்திய வாக்கை நிலைநாட்டுவதா? இந்த தர்ம சங்கடத்தின் மத்தியில் ஊசலாடும் அரசன் நினைக்கின்றான். ஆரசியல் நிலைமாறக் கூடியது. சத்தியம் நிலை மாறாதது. நிலைமாறும் தன்மையுள்ள அரசியற் கொள்கையைக் கைவிடுவேன்.

அ. தசரதனது ஊசலாட்ட நிலையை எடுத்துக் காட்டுக?
அரசியற் கொள்கையின் படி மூத்த புதல்வனுக்கு முடி சூட்டுவதா? அல்லது கைகேகிக்குக் கொடுத்த சத்திய வாக்கை நிலைநாட்டுவதா? ஏன்பதே தசரதனின் ஊசலாட்டமாகும்

ஆ. இறுதியில் தசரதன் எடுத்த முடிவில் எது முதன்மைப்படுத்தப்படுத்தப்படுகின்றது?
சத்தியம்

**வினா(09)**

இத்தனைக்கும் ஒரு நோய் வந்தா படுக்கையில் கிடந்து அழுந்தமாட்டா. ஆஸ்பத்திரி என்று அலையமாட்டா. ஆடாதோடையும், கொத்தமல்லியும் அவித்துக் குடித்து எழுந்து நடக்கிறா. ஆக்கம் பக்கம் ஆருக்கும் நோய் பிடித்தாலும் கூப்பிடாத வைத்தியராய் ஓடிப் போய் மருத்துவம் செய்வா. ஊரில் எது நடந்தாலும் மூத்தம்மா தான் வேண்டும். ‘‘கைராசிக்காரி நீங்கள் தான் மாமி, என்ர தலப்புள்ளய ஏந்தனும்.

அ. இங்கு குறிப்பிடப்படும் மூத்தம்மாவின் பண்புகள் எவை?
நோய் வந்தா படுக்கையில் அழுந்தமாட்டா. ஆஸ்பத்திரி என்று அலைய மாட்டா. அக்கம் பக்கத்தில் கூப்பிடாத வைத்தியராய் ஓடிப் போய் வைத்தியம் செய்வா. கைராசிக்காரி

ஆ. கைராசிக்காரி என்பதினூடாக நீர் விளங்கிக் கொள்வது யாது?
கையால் செய்யும் காரியங்கள் நன்மை தருதல்

**வினா(10)**

இனந்தெரியாத அச்சம் என்னைக் கௌவிக் கொண்டது. மூத்தவாப்பா குளிர் காயத் தீ மூட்டினார். ஏன் வெள்ளக் கொக்கு வெடவெடத்தது. சந்தனம் அரைத்து உச்சந் தலையில் பூசினார். அண்ணாவி மாமா வந்து ஓதிப் பார்த்தார். ஒரு ரூபாய் குற்றியை வெள்ளைத் துணியில் சுற்றிக் கட்டி உச்சிவட கல்லு அவுலியாவிற்கு நேந்து வைத்தார்.

அ. வெள்ளைக் கொக்காக உருவகிக்கப்படுபவர் யார்?
மூத்தம்மா

ஆ. இங்கு கூறப்பட்டுள்ள பழைமையான நம்பிக்கைகள் யாவை?
சந்தனம் அரைத்து உச்சந் தலையில் பூசுதல், ஓதிப் பார்தத்தல், பணத்தை வெள்ளைத்துணியில் சுற்றிக் கட்டி நேர்ந்து வைத்தல்.

**வினா(11)**

என் அருமைச் செல்வங்களே.... புறப்பட வேண்டியது தான். புறம்பு மலையின் இனிய சுனை நீரிற் ஒரு முடக்குக் குடியுங்கள். கடைசியாக முடிந்த மட்டுக்கும் இந்த மலைப் பூக்களின் மணத்தைஇழுத்து மூச்சடக்கிக் கொள்ளுங்கள். குடந்து செல்கையில் காற்கு வீசும். ஆனால் இந்த மலைப் பூக்களின் மணம் ...... பறவைகளின் ஒலி ஓயாது. பூாரி இருந்தால் பேச்சுக் கொடுப்பார்...... புறப்படுகின்றோம். பறம்பே...... மதுவிலும் , புலாலிலும் களித்திருந்த நட்பு நம்முடையது.

அ. இக் கூற்று எத்தகைய மனநிலையில் கபிலரால் கூறப்பட்டது?
சொந்த நாட்டை விட்டுப் பிரிகின்ற சோகமான மனநிலை (கையறு நிலை)

ஆ. பாரியிடம் கபிலருக்குள்ள ஈடுபாடு எவ்வாறு புலனாகின்றது?
பாரி இருந்தால் பேச்சுக் கொடுப்பார். மதுவிலும், புலாலிலும் களித்திருந்த நட்பு நம்முடையது என்று கபிலர் கூறுவதிலிருந்து புலனாகிறது.

## பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40-45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

மக்களுக்கு அறிவு வளர்ச்சி ஏற்பட ஆவன செய்வது ஊடகவியலாளர்கள் பொறுப்பு. அதே நேரம் அந்த அறிவை ஜனநாயக அடிப்படையில் மக்களுக்கு வழங்குவது பற்றியும் அவர்கள் கரிசனையாக இருக்க வேண்டும். அறிவு வளர்ச்சியானது சுதந்திர அடிப்படையிலும் தேர்வு அடிப்படையிலும் வளர வேண்டும். அதாவது அரசாங்கமோ அரச அதிகாரிகளோ இது தான் உண்மை என்று கூறும் போது ஆராயாமல் அதனை மக்களிடம் கொண்டு சேர்ப்பது எமது கையாலாகாத தனத்தையே பிரதிபலிக்கும் அங்கு எங்கள் ஆராயும் சுதந்திரம் பறிபோகின்றது. உதாரணத்திற்கு ஒரு நாடு எங்களுக்கு மிகச்சிறந்த அடிப்படையில் குறைந்த வட்டியில் கடன் தருகின்றது என்று அரசாங்கம் அறிவித்து அந்த நாட்டை புகழ்கின்றது என்று வைத்துக் கொள்வோம். ஆனால் பெரிய பெரிய உள்நாட்டு ஒப்பந்தத் தேர்வுகளில் மற்றைய நாடுகளை விண்ணப்பம் செய்ய இடமளிக்காமல் மேலே குறிப்பிட்ட குறைந்த வட்டி தரும். நாட்டுக்கு மட்டும் சிறப்பிடம் அளிக்கப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அதன் தாற்பரியம் என்ன? ஆயிரம் இலட்சத்துக்கு மற்றைய நாடுகளால் செய்து முடிக்கக் கூடிய ஒரு செயற்பாட்டை அந்த நாடு இரண்டாயிரம் இலட்சத்துக்கு செய்யப் போவதாக அறிவிக்கின்றது. எங்கள் நாடு வேறு வழியின்றி முன்னர் குறைந்த வட்டிக்கு பணம் வந்தால் அதற்கு ஒத்துக் கொள்கிறது. அங்கு குறைந்த வட்டி என்று புகழப்பட்ட நாடு இங்கு கொள்ளை இலாபத்திற்கு ஒப்பந்தத்தை ஏற்று நடைமுறைப் படுத்தப்படுகின்றது. எமது நாட்டுக்கு ஏற்படும் பயன், பாதிப்பு இவற்றை அலசி ஆராயாமல் அரசாங்கம் தரும் முதற் செய்தியை மட்டும் அரசாங்கம் எதிர்பார்ப்பது போல் அதற்கு அடிபணிந்து வெளியிட்டால் நாட்டுக்கு வேறு விதத்தில் ஏற்படப் போகும் பாதிப்புப் பற்றி மக்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லலாமல் போய்விடுகிறது. சமாந்தரமாக நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளை அலசி ஆராய்ந்து ஒன்றுக்கொன்று எவ்விதத்தில் அவை தொடர்புடையவை அவை மக்களையும் நாட்டையும் எந்தளவுக்கு பாதிக்கின்றன, பயன் தருகின்றன என்பதையெல்லாம் ஆராய்ந்து மக்களுக்கு அறிவூட்டுவது ஊடகவியலாளர் கடமை.அது மட்டுமல்லாமல் நடைபெறப் போகும் ஏதாவது செயற்பாடுகளால் நாட்டு மக்களுக்கு வருங்காலத்தில் ஏற்படவிருக்கும் பாதிப்புக்கள் பற்றி ஆராய்ந்து அவற்றை முன்கூட்டியே அறிவிப்பதும் ஊடகவியலாளர் பொறுப்பாகும்

**விடைச் சுருக்கம்**

மக்களுக்கு அறிவு வளர்ச்சி ஏற்பட ஆவன செய்வதும் அந்த அறிவை ஜனநாயக அடிப்படையில் மக்களுக்கு வழங்குவதும் சமாந்தரமாக நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளை அலசி ஆராய்ந்து ஒன்றுக்கொன்று எந்த விதத்தில் அவை தொடர்புடையவை என்பதையும் நாட்டையும் மக்களையும் எந்தளவுக்கு அவை பாதிக்கின்றன, பயன் தருகின்றன என்பதை ஆராய்ந்து மக்களுக்கு அறிவூட்டுவதும் நாட்டு மக்களுக்கு வருங்காலத்தில் ஏற்படவிருக்கும் பாதிப்புகள் பற்றி ஆராய்ந்து முன்கூட்டியே அறிவிப்பதும் ஊடகவியலாளர் கடமையாகும்.

## பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக

ஐம்பெருங் காப்பியம் என்று வழங்கும் நூல்களுள்ளே காலத்தால் முற்பட்டன இரட்டைக் காப்பியம் எனப்படும் சிலப்பதிகாரமும் மணிமேலையுமாம். வீரயுகத்திற்குப் பின்னர் தோன்றிய பேரிலக்கியங்களில் இன்று முழுமையாக எஞ்சியிருப்பன இவ்விரண்டுமே. இவற்றுடன் முன் பின்னாகத் தோன்றிய தகடூர் யாத்திரை பெரும்பகுதி மறைந்துவிட்டது. காவிய இலக்கணம் தமிழிலே வந்து புகுமுன்னரே தோன்றிய காரணத்தால் சிலம்பையும் மேகலையையும் ''காப்பியம்' எனக்கொள்ளாது தொடர்நிலைச் செய்யுள் என்பர். ஆயினும் தொடர்நிலை என்னும் வழக்கும் முதன்முதலிலே தண்டியலங்காரத்தில்தான் காணப்படும். இவ்விரு நூல்களின் ஆசிரியரும் தத்தம் படைப்பைப் பாட்டு என்றே கூறியமைந்தனர்.

சிலம்பு, மேகலை இரு நூல்களும் முறையே சமணம், பௌத்தம் என இருசமயங்களைப் போதித்தன என்று கூறுதல் போதுமானதன்று. ஒவ்வொரு குறிப்பிட்ட தத்துவத்திற்கேற்ப மனித வாழ்க்கை அமைகின்றது என்பதனைக் காட்ட இரு நூல்களும் முயல்கின்றன. உதாரணமாக, 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்பது இரு நூல்கட்கும் பொதுவான நம்பிக்கையாகும். புத்தசமயச் சார்பினால் ஏது நிகழ்ச்சி வாய்க்கப் பெற்றுத் துறவறத்தில் நின்று பவத்திறம் அறுக எனப் பாவை நோற்றது மணிமேகலை காட்டும் மனித வாழ்வும் இலட்சியமுமாம். அரசியல் பிழைத்த அரசன் அழிவான் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர். என்பன சிலம்பு வற்புறுத்தும் நம்பிக்கைகள். இத்தகைய கருத்துக்களைத் தூரநின்று அறவுரைகளாகப் போதனை செய்யலாம். இவை மனித உணர்ச்சிகளை உயிரோட்டம் மிக்க நெடுங்கதைகளாகக் கூறினர். இரு புலவர்களுக்கும் இது தற்செயலாக நடந்த நிகழ்ச்சி அன்று. தத்துவத்தின் ஒளியில் வாழ்க்கை முழுவதையும் விளக்க முனைந்ததன் பயனாகும்

1. காலத்தால் முற்பட்ட இரட்டைக்காப்பியங்களும் எவை?
2. தொடர்நிலை என்னும் வழக்குப் பிரயோகம் முதன்முதலில் எந்நூலில் காணப்படுகின்றது?
3. மணிமேகலை காட்டும் மனித வாழ்வின் இலட்சியமாக ஆசிரியர் எதனைக் கருதுகிறார்?
4. சிலம்பு வற்புறுத்தும் அறவுரைப் போதனைகள் எவை?
5. இரு நூல்கட்கும் பொதுவான நம்பிக்கையாக ஆசிரியர் எதனைக் கருதுகிறார்?

**விடைகள்**

1. காலத்தால் முற்பட்ட இரட்டைக்காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேலை.
2. தொடர்நிலை என்னும் வழக்கு முதன்முதலிலே தண்டியலங்காரத்தில் காணப்படுகிறது.
3. துறவறத்தில் நின்று பவத்திறம் அறுக எனப் பாவை நோற்றது என்பதே மணிமேகலை காட்டும் மனித வாழ்வின் இலட்சியமாகும்.
4. 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்', 'அரசியல் பிழைத்த அரசன் அழிவான்', 'பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்'.
5. 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்பதே இரு நூல்கட்கும் பொதுவான நம்பிக்கையாகும்

## மூத்தம்மா

**வினாக்கள்**

1. மூத்தம்மா என்னும் சிறுகதையின் ஆசிரியர் யார்?
2. இச்சிறுகதை எத்தொகுப்பில் இடம்பெறுகின்றது?
3. ஓட்டமாவடி அறபாத்தால் எழுதப்பட்ட வேறு சிறுகதைகளைத் தருக.
4. மூத்தம்மா சிறுகதையில் இடம்பெறும் கதாப்பாத்திரங்கள் எவை?
5. ''உறை தயிரின் பாலாடையோ என வியக்க வைத்தது அதன் அழகு'' இதில் உறை தயிர், பாலாடை எதற்கு உவமிக்கப்பட்டுள்ளது?
6. ''ஏன்கா ராவயில மட்டும் பக்குல் கத்துது''
   அ இக்கூற்று யாரால்? யாருக்கு? கூறப்பட்டது.
   ஆ பக்குல் என்பதன் பொருள் யாது?

7. ‘‘மழ வெய்யில நனயாம அவவ கொண்டு போகணும்’’
   அ இக்கூற்று யாரால், யாருக்கு கூறப்பட்டது?
   ஆ இக்கூற்றை நியமத் தமிழில் எழுதுக
8. ‘‘கைராசிக்காரி நீங்கள் தான் என்ர தலப் புள்ளய ஏந்தனும்’’
   அ இக்கூற்று யாரால், யாருக்கு கூறப்பட்டது?
   ஆ தலப் புள்ள என்பதன் பொருள் யாது?
9. ‘‘என் வெள்ளைக் கொக்கு துங்கிக் கொண்டிருந்தது’’
   அ இங்கு வெள்ளைக் கொக்கு எனக் கூறப்படுபவர் யார்?
   ஆ இங்கு கையாளப்பட்ட அணி யாது?
10. ‘‘இஞ்சால வா மகன் மையத்தை தூக்கப் போறாக’’
   அ. இக்கூற்று யாரால்? யாருக்கு? கூறப்பட்டது.
   ஆ .மையம் என்பதன் கருத்து யாது?
11. ‘‘சந்தூக்கின் பின்னால் ஓடிச்சென்றேன்’’
   அ.சந்தூக்கு என்பதன் பொருள் யாது?
   ஆ.‘‘சந்தூக்கின் பின்னால் ஓடிச்சென்றவர் யார்?
12. அல்லுக்குத்து என்பதன் பொருள் யாது ?
13. ‘‘மஞ்சோனா மரத்திலிருந்து இப்போது தான் பக்குல் பறந்து போனது’’ மஞ்சோனா மரம் என்பதன் தமிழ் வடிவம் யாது ?
14. ‘‘அப்ப ஏன்கா நம்மட உம்மா மவுத்தா போன அண்டெக்கு இது கத்தல்ல…..’’
   அ .இக் கூற்று இடம்பெற்ற சிறுகதை எது?
   ஆ .மவுத்தா என்பதன் தமிழ் வடிவம் யாது ?
15. மூத்தம்மாவுடன் எப்போதும் கூட இருப்பவை எவை?
16. விசில் சத்தம் ஏற்படுத்தும் கிலிக்கு கூறியுள்ள உவமை எது?
17. மூத்தம்மா சிறுகதை எப்பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டது?

**விடைகள்**

1. ஓட்டமாவடி அறபாத்
2. நினைந்தழுதல்
3. உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி, ஆண்மரம், நினைந்தழுதல்.
4. மூத்தம்மா, மூத்தம்மாவின் பேரன் காசிம், மூத்தவாப்பா, மூத்தம்மாவின் பேர்த்தி, ராகுமா மாமி, அவ்வாராத்தா, அன்னாவி மாமா.
5. உறைதயிர் - நிலவு, பாலாடை – வெண்மேகம்
6. அ யாரால்- காசிம் யாருக்கு- மூத்தம்மா
   ஆ கோட்டான், ஆந்தை
7. அ யாரால்-மூத்தவாப்பா யாருக்கு- காசிம்
   ஆ மழை வெயிலில் நனையாமல் அவளை கொண்டு போக வேண்டும்
8. அ யாரால்-அவ்வாராத்தா யாருக்கு- மூத்தம்மா
   ஆ மூத்த பிள்ளை
9. அ மூத்தம்மா
ஆ உருவகஅணி
10. அ.யாரால்- ராகுமா மாமி, யாருக்கு- காசிம்
   ஆ.பிணம், இறந்த, உடல், பிரேதம்
11. அ.பிரேதம்வைக்கும்பெட்டி
   ஆ.காசிம்
12. காதில் பெரிய தோடுகள் மேலிருந்து கீழாக நேர் வரிசையில் தொங்குவது.
13. மஞ்சள் வண்ண மரம், மஞ்சமுண்ணா மரம், மஞ்ச வண்ணா மரம்
14. அ. மூத்தம்மா
   ஆ .இறப்பு
15. வெற்றிலையை இடிக்கும் உரலும் ஆணியும்
16. அடிவயிற்றில் உரல் உருளுவதைப் போல்
17. மட்டக்களப்பு பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டது.

## தற்காலக் கவிதைகள்

### வினாக்கள்

1) தேயிலைத்தோட்டத்திலே என்ற கவிதையின் ஆசிரியர் யார்?
2) சி.வி. வேலுப்பிள்ளையின் நாவல்கள் மூன்று தருக?
3) தேயிலைத்தோட்டத்திலே என்ற ஆங்கிலக் கவிதையை தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?
4) ''ஊனையும் உடலையும் ஊட்டி இம்மண்ணை உயிர்த்தவர்க்கு''
   அ. இங்கு உயிர்த்தவர் என்று குறிப்பிடப்படுபவர் யார்?
   ஆ ஊன், உடல் என்பதன் ஒத்த சொல்லைத் தருக?
5) ''புழுதிப் படுக்கையில் புதைத்த எம் மக்களின்..''
   அ இக்கவிதையின் ஆசிரியர் யார்?
   ஆ இதில் யாருடைய துன்பியல் வாழ்க்கை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது?
6) குழந்தை என எனது மனம் குதூகலிக்கும் என்னும் கவிதையின் ஆசிரியர் யார்?
7) இவரின் இயற் பெயர் யாது?
8) ''சாமரத்தின் ஒப்பாகச் சிறகடித்துக் கூடிச் சதுரமாடும் மயில்கள்'' இதில் வந்துள்ள அணியை விளக்குக
9) ''மாமரத்தின் கிளைகளிலே மந்தியினம் தாவி மாங்கனிகள் பறித்துண்டு மகிழ்ந்து விளையாடும்''
   அ இங்கு மந்தி எனக் குறிப்பிடப்படுவது எது?
   ஆஇவ்வாக்கியத்தின் எழுவாய் பயனியைக் குறிப்பிடுக
10) ''தேனருவி என வழியும் ஏருழவன் வியர்வை''
   அ. இதில் வந்துள்ள அணியை விளக்குக
   ஆ.தேன், உழவன் என்பதன் ஒத்த சொல்லைத் தருக
11) குணக் குன்று என்பது எவ்வகை அணி? விளக்குக.
12) சீறி ஓடாத மனித நதி என்னும் கவிதையின் ஆசிரியர் யார்?
13) இவரின் இயற் பெயர் யாது?
14) ''கையொப்பம் இடு என்றேன் இடது பெருவிரலை ஊன்றி வெட்கிச் சிரித்தான் அது ஒரு செத்த சிரிப்பு''
   ஆ. செத்த சிரிப்பு என்றால் என்ன?
   ஆ. அவன் எவ்வாறு ஒப்பமிட்டான்?
15) மனித நதி என்பது எவ்வகை அணி?
16) மனித நதியாக உருவகிக்கப்படுவது?

## விடைகள்

1) சி.வி.வேலுப்பிள்ளை
2) காதற் சித்திரம், வீடற்றவன், இனிப்படமாட்டேன்
3) சக்தி அ. பாலஐயா
4) அ. உடலை வருத்தி உழைத்து இம்மண்ணிற்கு உயிரூட்டி உழைப்பினைத் தந்தவர்.
   ஆ ஊன் - தசை உடல் - மெய், சரீரம்
5) அ. சி.வி.வேலுப்பிள்ளை
   ஆ.தோட்டத்தொழிலாளர்களின்
6) அகளங்கன்
7) நா.தர்மராஜா
8) உவமை அணி
   உவமானம் - சாமரம்
   உவமேயம் - மயில்கள்
   பொதுத்தன்மை – வீசுதல்
9) அ. பெண்குரங்கு
   ஆ. எழுவாய் - மயில்கள், பயனிலை- விளையாடும்
10) அ. உவமை அணி
   உவமானம் - தேனருவி
   உவமேயம் - ஏருழவன் வியர்வை
   பொதுத்தன்மை – வழிதல்
   ஆ .தேன் - மது உழவன் - விவசாயி

11) உருவக அணி குணமாகிய குன்று
12) கவிஞர் சோலைக்கிளி
13) உதுமா லெவ்வை முகமது அதீக்
14) அ. எந்த உணர்வுமில்லாத சிரிப்பு
ஆ இடது கைப் பெருவிரலால் ஒப்பமிட்டான்
15) உருவக அணி
16) எழுத்தறிவு இல்லாதவர்களை.

## அற்றைத்திங்கள்

**வினாக்கள்**

1. அற்றைத்திங்கள் என்ற நாடகத்தின் ஆசிரியர் யார்?
2. இவரது இயற்பெயர் யாது?
3. அற்றைத்திங்கள் என்ற நாடகத்தில் வரும் குறுநில மன்னன் யார்?
4. இவர் ஆட்சி செய்த மலை எது?
5. இவரின் மக்கள் யாவர்?
6. அற்றைத் திங்கள் என்ற நாடகம் பாடப்பட்ட சந்தர்ப்பத்தைக் கூறுக
7. அற்றைத் திங்கள்……. என்ற பாடல் இடம்பெறும் நூல் எது?
8. இப்பாடலின் திணை, துறை என்பவற்றைக் குறிப்பிடுக.
9. "அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையுமுடையோம் எம் குன்றும் பிறர்கொளார்"
அ. அற்றைத்திங்கள் என்பதன் பொருள் யாது?
ஆ இங்கு குறிப்பிடப்படும் குன்றின் பெயர் என்ன?
இ எந்தை என்பதன் பொருள் யாது?
ஈ திங்கள் என்பதன் பொருள் யாது?
10. உமணர்கள் எனப்படுவோர் யார்?
11. மரப்பாச்சி என்பதன் பொருள் யாது?
12. பாரியின் நண்பன் யார்?
13. கபிலர் பாரி மகளிரை யாரிடம் ஒப்படைத்தார்?
14. பாரி மன்னனுடன் போர் தொடுத்தவர்கள் யாவர்?
15. "என் அருமைச் செல்வங்களே புறப்பட வேண்டியது தான்" யாரால் யாருக்கு கூறப்பட்டது?

**விடைகள்**

1. இன்குலாப்
2. சாகுல் அமீது
3. பாரி மன்னன்
4. பறம்பு மலை
5. அங்கவை சங்கவை
6. பாரி மன்னனின் இறப்புத் துயரத்தினைத் தாங்க முடியாத அவரது மகளிரால் பாடப்பட்டது.
7. புறநானூறு
8. திணை – பொதுவியல், துறை – கையறுநிலை
9. அ. அந்த மாதம். ஆ. பறம்பு. இ. எம் தந்தை. ஈ. மாதம்
10. உப்பு விற்பவர்கள்
11. பொம்மை
12. கபிலர்
13. ஔவையாரிடம்
14. மூவேந்தர்கள்
15. கபிரால் பாரி மகளிருக்கு

## மாதிரி வினாத்தாள்

**தரம் 11 பாடம் - தமிழ்மொழியும் இலக்கியமும் நேரம் - 3 மணித்தியாலங்கள்**

<u>பகுதி 1</u>

01. "பிரிவின் கண் பீழை தருவது ஒன்றில்……." இங்கு பீழை என்பது
1. இன்பம் 2. துன்பம் 3. மயக்கம் 4. மகிழ்ச்சி

02. "மெலிந்து அப்பு இறைக்கும் விழிவேலே….." இங்கு அப்பு என்பது
1.முத்து 2. கண் 3. நீர் 4. சந்திரன்

03. மகனின் கல்விச் சாதனையைக் கேட்ட தாய் இறும்பூது எய்தினாள். இங்கு இறும்பூது என்பதன் பொருள்
1. மகிழ்ச்சி 2. பெருமிதம் 3. மயக்கம் 4. செருக்கு

04. வல்லரசுகள் அணுஆயுதத் தடை ஒப்பந்தத்திற்கு இணக்கம் தெரிவித்தன. இங்கு இணக்கம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்

1. சுணக்கம் 2. மயக்கம் 3. சம்மதம் 4. பிணக்கம்

05. கணிப்பொறியில் கைதேர்ந்த நிபுணர்கள் போல் விவாதம் செய்தனர்.இங்கு நிபுணன் என்பதன் எதிர்ப்பாற் சொல்

1. நிபுணை 2. நிபுணி 3. நிபுணள் 4. நிபுணிச்சி

06. இன்றைய இளைய தலைமுறையினரிடம் வட்ஸப் (Whatsapp) பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. வட்ஸப் என்பதன் கலைச்சொல்

1. அதிரி 2. முகநூல் 3. புலனம் 4. கீச்சகம்

07. உலக நடையறிந்து ஒழுகுதல்

1. ஒப்புரவு 2. ஓம்படை 3. பொதுவியல் 4. உரைகல்

08. வேய், அமை, வரை என்பன குறிக்கும் ஒரு சொல்

1. காடு 2. மலை 3. கடல் 4. மூங்கில்

09. பின்வருவனவற்றுள் மராட்டி மொழிச் சொல்லாக அமைவது.

1. தூபி 2. கச்சேரி 3. அட்டவணை 4. துப்பாக்கி

10. பொருத்தமற்ற கூட்ட மரபுப் பெயர்ச் சோடியாக அமைவது.

1. திறப்பு – கோவை 3. சுருட்டு – கட்டு
2. கருவாடு – பாடம் 4. வைக்கோல் - கற்றை

11. நரியின் ஆண் ஓரி . நரியின் பெண்

1. பிடி 2. பெடை 3. பாட்டி 4. பிணை

12. முதுமைக்காலத் தேவைக்காக சேமித்து வைக்கப்படும் பொருள்

1. சேமிப்பு 2. எய்ப்பில் வைப்பு 3. ஓலக்கம் 4. சொத்து

13. சாக்குப்போக்குச் சொல்லுதல் என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்

1. பசையடித்தல் 2. இடித்துரைத்தல் 3. ஆறப்போடுதல் 4. தட்டிக்கழித்தல்

14. கையறுநிலை என்பதைக் குறிக்கும் உவமைத்தொடர்

1. செக்கிழுத்தமாடுபோல 3. குன்று முட்டிய குருவி போல
2. அன்றிலும் பெடையும் போல 4. சிறகிழந்த பறவை போல

15. ஆணம் என்பது எப்பிரதேசக் கிளைமொழி

1. வடக்கு 2. கிழக்கு 3. மலையகம் 4. மேற்கு

16. பின்வருவனவற்றுள் இணைமொழியாக அமைவது

1. கன்னங்கரிய 2. ஏறஏற 3. அமளிதுமளி 4. கலகல

17. பிறருக்கத் தீங்கு விளைவிக்கும் சொற்களைக் கொண்டு கவிபாடுதல்

1. அறம்பாடுதல் 2. வசைக்கவி 3. விகடகவி 4. அங்கதக்கவி

18. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் என்ற அருஞ்சொற்றொடரால் உணர்த்தப்படுவது

1. அழகு 2. வளர்ச்சி 3. காத்திருத்தல் 4. மாற்றம்

19. பற்றற்ற தன்மையை உணர்த்தும் உவமைத் தொடர்

1. நீர்க்குமிழி போல 3. எள்ளும் எண்ணெய்யும் போல
2. ஓடும் புளியம்பழமும் போல 4. மணியும் ஒலியும் போல

20. தமிழிலுள்ள உயிர்மெய்நெட்டெழுத்துக்களின் எண்ணிக்கை

1. 12 2. 18 3. 90 4. 126

21. பெயராகவும் வினையாகவும் அமையும் சொல்

1. நில் 2. வரை 3. வா 4. எண்

22. வன்தொடர் குற்றியலுகரச்சொற்களைக் கொண்ட சரியான சொற்றொகுதி

1. பத்து, கொக்கு, புற்று 3. வண்டு, கொய்து, பசு
2. பங்கு, புற்று, பாக்கு 4. சங்கு, வாக்கு, ஆடு

23. ககரமெய் வேறுபட்டு ஒலிக்கும் சொல்

1. கப்பல் 2. காடு 3. பக்கம் 4. சிங்கம்

24. உடனிலை மெய்மயக்கச் சொல்லாக அமையாதது

1. பக்கம் 2. சத்தம் 3. சங்கம் 4. தத்தை

25. ஓடுமீன் ஓட…… என்பதில் ஓடுமீன் என்பது.
1. உவமைத்தொகை 3. வினைத்தொகை
2. வேற்றுமைத்தொகை 4. பண்புத்தொகை

26. நான் நாளைக்குத் தருகிறேன். இவ் வாக்கியம்
1. இடவழு 2. திணைவழு 3. காலவழு 4. எண்வழு

27. நோயால் இறந்தான் . இங்கு ஆல் உருபு உணர்த்தும் பொருள்
1. மூலப்பொருள் 3. காரணப்பொருள்
2. அடைமொழிப் பொருள் 4. கூட்டல் பொருள்

28. பன்மையில் வழங்காத சொல்
1. நான் 2. புத்தகம் 3. மழை 4. காலம்

29. பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க
1. இயல்பு புணர்ச்சி -கடலலை, தேன்மொழி, ஆணழகன்
2. திரிதல் விகாரம் - கடற்கரை, பற்பொடி, மட்குடம்
3. கெடுதல் விகாரம் - மரவேர், வானவெளி, தாகசாந்தி
4. தோன்றல் விகாரம் - பூமரம், வாழைமரம், திருவடி

30. பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க
1. ஆக்கப்பெயர் - முதலாளி, அசட்டுத்தனம், மருத்துவம்
2. கூட்டுப் பெயர்- நீர்வீழ்ச்சி, வானொலி, கண்காட்சி
3. வினையாலணையும் பெயர் - வந்தவனை, விழுந்தவன், கொடுத்ததை
4. மாற்றுப் பெயர் - நான், நீ, அவன்

31. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம்………. வழங்கியது
1. இழப்பீடு 2. மதிப்பீடு 3. காப்பீடு 4. முதலீடு

32. கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக பாடசாலைகளுக்கு…………. அனுப்பி வைக்கப்பட்டது.
1. அறிவித்தல் 2. துண்டுப்பிரசுரம் 3. சுவரொட்டி 4. சுற்றுநிரூபம்

33. பொய்சொல்வதும் களவெடுப்பதுவும் நல்ல……….
1. பழக்கங்கள் அல்ல 3. பழக்கங்கள் அன்று
2. பழக்கம் அன்று 4. பழக்கமல்ல

34. நெற்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக அரசாங்கம் நெற்செய்கையாளருக்கு …………… வழங்கத் தீர்மானித்துள்ளது.
1. நன்கொடை 2. நிவாரணம் 3. மானியம் 4. செலவாணி

35. போதைப் பொருள்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமை தொடர்பாக இளைஞர்கள் மத்தியில்………. செய்யப்பட்டது.
1. பிரசாரம் 2. பிரச்சாரம் 3. பிரகடனம் 4. பிரகாரம்

36. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஆணைக்குழு …………. செய்தது.
1. ஆய்வுரை 2. பரிந்துரை 3. மதிப்புரை 4. அணிந்துரை

**மானிடம் அடைந்து நிற்கும் மாதவப் பேறின் உள்ளே**
**வானுறு பேறும் ஒன்று வையத்து உண்டே ஆயின்**
**தான் எனும் நிலை கடந்த தாய்மையே என்று சொல்வேன்**
**பானுவாய் ஒளிரும் அந்தப் பேற்றினுக்கு ஒப்பே இல்லை**

37. இப்பாடலில் குறிப்பிடப்படும் மையக் கருத்து யாது?
1. தாய்மையின் சிறப்பு 3. மானுடச் சிறப்பு
2. பானுவின் சிறப்பு 4. மாதவச் சிறப்பு

38. “தான் என்னும் நிலை கடந்த” என்னும் தொடர் மூலம் உணர்த்தப்படுவது
1. தன்னலம் 2. தன்னலமின்மை 3. உயர்நிலை 4. பெருமிதம்

39. பானு என்பதன் பொருள்
1. உலகம் 2. சந்திரன் 3. சூரியன் 4. பேறு

40. கீழே காணப்படும் வாக்கியங்களை ஒழுங்கபடுத்தி பந்தியமைப்பதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க

அ. மனித விழுமியங்களைக் கொண்டிராத அறிவு பயனற்றது
ஆ. அது அறிவியல் சார்ந்தது
இ. அறிவியல் என்பது அறிவென்னும் நாணயத்தின் ஒரு பக்கம் மட்டுமே
ஈ. அறவியல், அறிவியல் என்பன மனித வாழ்வின் இரு முக்கிய விடயங்களாகும்
உ. பாரிய பொறுப்பினை நிறைவேற்ற வேண்டிய இளைஞர்கள் அதனை உணராமல் செயற்படுகின்றனர்

1. ஆ,இ,அ,உ,ஈ 2. உ,ஈ,ஆ,இ,அ 3. ஈ,ஆ,உ,இ,அ 4. உ,இ,ஆ,அ,ஈ

## தமிழ்மொழியும் இலக்கியமும் 11

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் தருக.**

**01. சுருக்கமான விடை தருக**

01. பின்வரும் தொடரை சந்தி பிரித்து எழுதுக
ஐய வன்பி னிறைந்தாளை யுரையென்ன
02. நிறை என்ற சொல் பெயராகவும், வினையாகவும் வரத்தக்கதாக தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக
03. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டு வாக்கியத்தினை மீண்டும் எழுதுக?
வினுக்குட்டிக்கு அம்மா இன்னும் வரேலையே இனி வந்திடுவா என்ன என்று கூறினாள்
04. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளைக் குறிப்பிடுக
திரை கடலோடியும் திரவியம் தேடு
05. வழு நீக்கி எழுதுக
பல கருத்துக்கள் அங்கு முன்வைக்கப்பட்டது.
06. அம்மா காய்கறி வாங்கச் சந்தைக்குச் சென்றார். இவ் வாக்கியத்தில் தலைமைத் தொடரையும், சார்புத் தொடரையும் இனங் கண்டு எழுதுக?
07. ஆசிரியர்கள் நற்பண்புகளை மாணவர்களுக்கு விளக்கினர். இச் செய்வினை வாக்கியத்தை செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக
08. கால் கொள்ளுதல் என்ற மரபுத் தொடர் உணர்த்தும் பொருள் யாது?
09. மாலா கவனமாகப் படித்தாள். அவள் பரீட்சையில் சித்தியடையவில்லை.
பொருத்தமான இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்குக
10. “மையல் ஒருவன் களித்தற்றால் பேதை தன்…………”. இதில் பயின்றுள்ள அணி யாது?

(20 புள்ளிகள்)

**02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

அ. கொரோனா வைரசின் தாக்கமானது தற்போது முழு உலகையுமே அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது. இந்நோயின் பாதிப்பானது உலகப் பொருளாதாரத்தில் தங்கத்தின் விலையேற்றம் உட்பட பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.எமது நாட்டிலும் பல்வேறு நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது. இந் நோயின் கோரப்பிடியிலிருந்து உலகு மீண்டு வர அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி ஒரு விளக்கக் கட்டுரை எழுதுக

ஆ. நீர் உலகின் அத்தியாவசிய தேவைகளுள் ஒன்று. உயிர்களின் வாழ்வாதாரமானது. அது இயற்கையின் கொடை. எனினும் வரையறுக்கப்பட்ட அளவிலேயே கிடைப்பது. ஆனால் மனிதன் நீரை மாசுபடுத்துவதோடு வீண்விரயமும் செய்கிறான். அதைத் தடுப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் ஒரு மேடைப்பேச்சு

இ. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இன்று மக்களை ஆக்கிரமித்திருக்கும் பிரதான ஊடகமாக விளங்குகின்றன. செய்மதித் தொழினுட்பம் வாயிலாக நூற்றுக் கணக்கான சர்வதேச தொலைக்காட்சி அலைவரிசைகளைக் கண்டு களிக்கும் வாய்ப்பு உலகெங்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது, இவ்வாறான நிகழ்ச்சிகளால் மனித நடத்தைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இம் மாற்றங்கள் சாதகமாகவும் , பாதகமாகவும் அமைந்து வருகின்றன என்பது தொடர்பாக இருவருக்கிடையில் இடம் பெறும் உரையாடல்

ஈ. சிறுவயதிலே தாய் தந்தையை இழந்த சாந்தன் தனது தங்கையுடன் தனிமைப்பட்டு குடும்பச்சுமை தாங்குகின்றான். இதனால் உறவுகளால் ஒதுக்கிவிடப்பட்ட போதும் சிறந்த நட்பினாலும், ஆசிரிய வழிகாட்டலினாலும் கல்வியில் உயர்ந்து உயர் நிலையை அடைகின்றான். என்பதைக் கருவாகக் கொண்டு ஓர் சிறுகதை எழுதுக. அதற்குப் பொருத்தமான தலைப்பிடுக

**03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக?**

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த உரைநடை ஆசிரியர்களுள் சிவஞானசுவாமிகள் ஒப்புயர்வுற்று விளங்கியது போலவே பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆறுமுக நாவலர் சிறப்புற்று விளங்கினார். தமிழ்மொழி வளர்ச்சிக்கு உரைநடை விருத்தி அவசியமென்று வற்புறுத்தினோருள் ஆறுமுகநாவலர் சிறந்தவர். கிறிஸ்து மதப் பிரசாரத்தினால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசமயத்திற்கு உண்டான தளர்ச்சியை நீக்கிய நாவலர் பெருந்தகை தமிழ் மொழியை வளர்த்தற்குப் பல முயற்சிகள் செய்துள்ளார். சென்னையிலே அச்சியந்திரசாலை ஒன்றை அமைத்துப் பல தமிழ் நூல்களைத் திருந்திய முறையிலே பிழையறப் பதிப்பித்தார். எடுத்துக் கொண்ட காரியம் எதனையும் சோர்வின்றித் திருத்தமாகச் செய்யும் இயல்பினர் நாவலர் என்பதற்கு, வழுக்களின்றி அவர் அச்சிட்ட நூல்களே சான்றாகும். செய்யுள் இலக்கியங்கள் வேண்டியளவு தமிழில் இருப்பதால் அவற்றை இயற்றுவதிலும் உரைநடை இலக்கியங்களை இயற்றுவதே தமிழ் மொழியை வளர்ப்பதற்கு சிறந்த வழி என்று கொண்டு பெரியபுராணம் , திருவிளையாடற் புராணம் முதலியவற்றை உரை நடையில் எழுதியதோடு பல கட்டுரைகளையும், கண்டன நூல்களையும் , மாணாக்கர் கற்றலுக்கு வேண்டிய உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். நாவலருடைய உரைநடை பழமையையும், புதுமையையும் ஒருங்கு தழுவிய முற்போக்குடைய ஒரு சிறந்த நடையாகும். பழைய இலக்கண முறைகளை அனுசரித்து, உரையாசிரியர்கள் எழுதிய நடை போன்ற ஒரு கம்பீரமான நடையில் எழுதக் கூடிய ஆற்றலுடையவராய் இருந்த போதிலும், தமிழினிற் குறைந்தோரும் எளிதிற் பொருள் காணக் கூடிய வகையில் காலத்திற்கேற்றவாறு வழக்கிலுள்ள வழுவற்ற சொற்களையும் பிரயோகித்து ஒரு சிறந்த நடையினைக் கையாண்டு எழுதினார். அதனால் அவர் ''வசன நடை கைவந்த வல்லாளர்'' என்று பாராட்டுப் பெற்றார்.

(10 புள்ளிகள்)

**04. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக**

தமிழ் காப்பிய இலக்கியங்களில் மிகச்சிறப்பாக உள்ளவற்றில் கம்பராமாயணத்திற்கு அடுத்தபடி பாத்திரப்படைப்பு, வர்ணனை, கதைச்சிறப்பு முதலியவற்றில் சிறந்து நிற்பது சீவகசிந்தாமணி. இது ஐம்பெருங் காப்பியங்களில் முதன்மையானது. இவற்றோடு சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி ஆகிய காப்பியங்களும் அடங்குகின்றன.

சீவகன் என்னும் வீரனைப் பற்றிய காப்பியமாதலால் சீவகசிந்தாமணி என்னும் பெயரை இக்காப்பியம் பெற்றது. தனக்கு யாரும் ஒப்பில்லாத தலைவனை உடையதாய் நாடு, நகரம், அரசு, திருமணம் முதலிய பலவற்றை வர்ணிப்பதாய் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருளும் உடையதாய் அமைவதால் முதந்தரப் பெருங்காப்பியம் என அணி இலக்கணம் கூறுகின்றது. அத்தகைய இலக்கணங்கள் எல்லாம் ஒன்று சேர அமையப் பெற்றது சீவகசிந்தாமணி. ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய இந்நூலை இயற்றியவர் திருத்தக்கதேவர் என்னும் சைவமுனிவர். சீவகசிந்தாமணி 13 அத்தியாயங்களைக் கொண்டது. அவை இலம்பகம் என்ற பெயர் கொண்டு அழைக்கப்படும். இந்நூலிலுள்ள செய்யுட்கள் 3145. இந்நூலுக்கு நச்சினாக்கினியர் அழகாக உரை

எழுதியுள்ளார். சீவகசிந்தாமணிக்கு ''மணநூல்'' என்னும் பெயரும் உண்டு. ஒவ்வொரு இலம்பகமும் திருமணத்தைச் சொல்லுவதால் இப் பெயரைப்பெற்றது.

அ. இக் காப்பியத்திற்கு சீவகசிந்தாமணி என பெயர் வரக் காரணம் யாது?

ஆ. பெருங் காப்பியத்திற்குரிய இலக்கணம் என்ன?

இ. இந்நூலுக்கு மண நூல் என பெயர்வரக் காரணம் என்ன?

ஈ. சீவகசிந்தாமணியின் உட்பிரிவுகள் எப்படி அழைக்கப்படும்?

உ. இந்நூலுக்கு உரை எழுதியவர் யார்?

(5x2=10 புள்ளிகள்)

**05.** பல்லவபுரம் பிரதேசத்தில் அமைந்துள்ள பொது நூலகமானது, வாசகருக்கும் போதுமான அளவில் பல்துறை சார்ந்த நூல்கள் இன்றியும், ஏனைய வசதிகள் இன்றியும் காணப்படுகின்றது. அப் பிரதேச அபிவிருத்திக் குழு செயலாளர் ப.தருமராஜன் என உங்களைக் கருதிக் கொண்டு பிரதேசவாசிகள் பொது நூலகத்தைப் பயன்படுத்தும் வகையில் நவீன மயப்படுத்தித் தருமாறு கோரி பல்லவபுரம் பிரதேச செயலாளருக்கு 100 சொற்களில் கடிதம் எழுதுக?

**அல்லது**

கணேசபுரம் ஊரில் உள்ள விளையாட்டுக்கழகச் செயலாளராக உம்மைக் கருதிக் கொண்டு, உமது பிரதேசத்தில் நடைபெற்ற கழக விளையாட்டுப்போட்டி பற்றிய செய்திகளைப் பிரசுரிப்பதற்கு பின்வரும் அம்சங்களைக் கருத்திற் கொண்டு 100 சொற்களில் பத்திரிகைச் செய்தி ஒன்று வரைக?

1. பிரதேசத்தின் பெயர்
2. பங்குபற்றிய கழகங்களின் விபரங்கள்
3. காலம், நேரம்
4. பிரதம விருந்தினர்
5. நிகழ்வுகள்
6. அனுசரனை வழங்குவோர்

(15 புள்ளிகள்)

## பகுதி111

**நேரம் - 2 மணித்தியாலங்கள்**

**1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக**

**01. சுருக்கமான விடை தருக.**

01. ''பிரசண்ட மாருதத்திற்குப் பிறகு'' என்று சொல்கின்ற பிறகு அந்தச் சபையில் நிலவியது.

அ. பிரசண்ட மாருதம் என்றால் என்ன?

ஆ. பிரசண்ட மாருதத்திற்குப் பிறகு காணப்படும் நிலை எத்தகையது?

02. ''நீரெடுத்து வருவதற்கவள் மணி நித்திலப் புன்னகை சுடர் வீசிட…''

அ. நித்திலம் என்றால் என்ன?

ஆ. இங்கு இடம் பெறும் அணி யாது?

03. ''பாரில் பிண்ணாக்கு முண்டாம்''

அ. பிண்ணாக்கு எனும் தொடர் குறிக்கும் இரு பொருள்களும் எவை?

ஆ. இப் பாடலில் இடம் பெறும் அணி யாது?

04 ''சந்தி பிரிக்காத பாடல் போல தலை சுற்றியது விவகாரம்.''

அ. இங்கு சந்தி பிரிக்காத பாடல் போல தலைசுற்றியது எனக் கூறப்பட்டது ஏன்?

ஆ. இக் கூற்று இடம் பெறும் இலக்கியம் எது?

05. அவனி பண்டாண்ட வேந்தரையிழித்து மேலேறினான். தானுமேறினான். இங்கு

அ. மேலேறினான் எனும் தொடர் விளக்குவது யாது?

ஆ. இப் பாடலில் குறிப்பிடப்படும் மன்னன் யார்?

06. ''அத்திறம் நிற்க''

அ. இக் கூற்றை கூறியவர் யார்?

ஆ. இக் கூற்றின் மூலம் குறிப்பிடப்படும் மகளிர்கள் யாவர்?

07. ''ஊரன் கேண்மை செய்து இன்புற்றனெம் செறிந்தன வளையே''.

அ. இங்கு தலைவியின் வளையல்கள் இறுகி அமைந்தமைக்கு கூறப்படும் காரணம் யாது?

ஆ.இன்புற்றனெம் எனும் தோழியின் கூற்று எதனைப் புலப்படுத்துகின்றது?

08. பதேர் பாஞ்சாலியில் பருவங்கள் மாறுவதை வரிசையாக்கி மயங்கித் தெளிதல்கள் மூலம் உணர்த்துகின்றார்.
அ. பதேர் பாஞ்சாலியின் ஆசிரியர் யார்?
ஆ. மயங்கித் தெளிதல் என்றால் என்ன?

09. வெங்கட்பிறைக்கும், கரும்பிறைக்கும் , மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே
அ. கரும்பிறை என்பது யாரைக் குறிக்கும்?
ஆ. அப்பிறைக்கும் என்பதன் பொருள் யாது?

10. ''மேழி பெருக வேணும் தம்பிரானே
நாடு தழைக்க வேணும் தம்பிரானே''
அ. மேழி என்பதன் பொருள் யாது?
ஆ. இது எவ் வகையான நாட்டார் பாடலாகும்?

(20 புள்ளிகள்)

**02. பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைநடைப் பகுதிகளை வாசித்து, அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக?**

01. நைவீர லீர்மைந்தீ ரினித் துயரா
னாடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற்
றாமன்றே விலங்கற் றிண் டோட்
கைவீரக் களிறனைய காளையிவன்
றன்னோடு கலந்து நீங்க
ளைவீரு மொருவீரா யகலிடத்தை
நெடுங்கால மளித்தி ரென்றாள்

அ. புதல்வர்களை வருந்த வேண்டாம் என்பதற்கு கோசலை கூறிய காரணம் என்ன?
ஆ. குகனின் சிறப்புக்களாக இப் பாடலில் கூறப்பட்ட விடயங்கள் எவை?

02. புலங்க ளோடு கரணமும் ஆவியும்
போந்து நின்ற விருப்புடன் மானிடன்
நலங்க ளேது விரும்புவன் அங்கவை
நண்ணு றப்பெறல் திண்ணம் தாமென,
இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்
யானும் மற்றது மெய்யெனத் தேர் ந்துளேன்
விலங்கி யற்கை யிலையெனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே.

அ. ஒருவர் தாம் விரும்பும் நலன்களை எவ்வாறு அடையலாம் எனக் கூறப்பட்டுள்ளது?
ஆ. ''விலங்கியற்கை'' என்பதன் மூலம் உணர்த்தப்படும் இயல்பு யாது?

03. கழியும் பிழைபொருட் டள்ளிநன்னூலாங் கடலினுண்டு
வழியும் பொதிகை வரையினிற் கால்கொண்டு வண்கவிதை
மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கிமின்னிப்
பொழியும் படிக்கக் கவிகாள மேகம் புறப்பட்டதே

**அ. இப் பாடலில் காளமேகத்தின் கவிச் சிறப்பு எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?**

**ஆ. ''நன்னூலாங் கடலினுண்டு'' என்பதில் கையாளப்பட்டுள்ள அணி யாது?**

04. இராமாயணத்தில் ஒரு காட்சி. தசரதன் இரண்டு இலட்சியங்களிடையே ஊசலாடுகிறான். ஒன்று அரசியல். மற்றையது சத்தியம். இவ் இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்வதில் அவன் திண்டாடுகின்றான். அரசியற் கொள்கையின்படி மூத்த புதல்வனுக்கு முடி சூட்டுவதா? அல்லது கைகேயிக்குக் கூறிய சத்திய வாக்கை நிலைநாட்டுவதா? இந்த தர்மசங்கடத்தின் மத்தியில் ஊசலாடுகின்றான் அரசன்.

**அ. இவ் உரைப்பகுதியில் அரசியல்முறை பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்து யாது?**
**ஆ. தசரத மன்னனின் மனஊசலாட்டத்திற்கான காரணங்கள் யாவை?**

05. சினிமா, கமிராவினால் பதிவு செய்யப்பட்ட பல்சுவை நிகழ்ச்சியல்ல. எந்த ஒரு படத்திலும் இழையோடும் ஒரு மையக்கரு இருக்கும். இந்தக் கருவைச் சாராத எந்தக் காட்சிப் படிமத்திற்கும் , ஒலிக்கும் அப்படத்தில் இடமில்லை. அப்படிச் சம்பந்தமில்லாத காட்சி வந்தால் அது சினிமாவாக இல்லாமல் படமாக்கப்பட்ட பல்சுவை நிகழ்ச்சியாகிறது. சினிமா, வாய்ப்பேச்சால், வார்த்தைகளால் சொல்லப்படுவதில்லை. அப்படியிருந்தால் அதற்கு ஒரு திரை தேவையிருக்காது. ஒலி நாடாவிலோ, வானொலியிலோ கேட்டுத் திருப்தி அடைய முடியும்.

**அ. நல்ல சினிமாவின் சிறப்புக்களாக இங்கு குறிப்படப்படுவன யாவை?**

**ஆ. ஒரு சினிமா எப்போது பல்சுவை நிகழ்ச்சியாகிறது?**

(20 ள்ளிகள்)

03. திருக்குற்றாலக் குறவஞ்சி என்ற பாடற் பகுதியில்

அ. குற்றால மலையின் சிறப்புக்கள்
ஆ. பாடல்களில் கையாளப்பட்டுள்ள அணிச்சிறப்புக்கள் என்பனவற்றை விளக்குக?

**அல்லது**

திருக்குறள் பேதைமை என்ற அதிகாரத்தில்
அ. பேதையரின் இயல்புகள்
ஆ. பேதையரின் செயல்கள்
இ. கையாளப்பட்டுள்ள அணிகள் என்பவற்றை விளக்குக?

04. எது நல்ல சினிமா என்ற கட்டுரையில்
அ. நாடகத்திற்கும் சினிமாவிற்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகள்.
ஆ. சினிமா மொழியில் அடங்கும் முக்கிய மூன்று அம்சங்கள்
என்பனவற்றை விளக்குக?

**அல்லது**

கம்பியூட்டர் என்ற சிறகதையில்
அ. கம்பியூட்டர் வரவால் வீட்டில் ஏற்பட்ட மாறுதல்கள்
ஆ. சிறுகதையில் கையாளப்பட்டுள்ள அணிகள்
என்பவற்றை விளக்குக?

(15 புள்ளிகள்)

**5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக**

**06.** நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில் நாவலர் எழுந்த விதம் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது என்பதை விளக்குக?

**07.** நாட்டார் பாடற் பகுதியில்
அ. அரிவி வெட்டுப் பாடலில் ஐயனாரிடம் வேண்டப்படுபவை.
ஆ. காதல் பாடலில் காதலனின் காதல் உணர்வு.
என்பனவற்றை விளக்குக?

**08.** “இனி நினைந்திரக்க மாகின்று………” என்ற புறநானூற்றுச் செய்யுளில்
அ.இளமைக்கால நிலை,
ஆ.முதுமைக்கால நிலை
என்பன எடுத்துக்காட்டப்படமாற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)